பொது சன நூல் நிலையம்



சிவாயநம:

# இந்துநாகரிகம்

## உள்ளே...


இதழ் இரண்டு ஆடி 1987

கொடிமரமும் கொடியேற்றமும்
திருக்கோயிலின் அமைப்பு
நல்லூர் முருகன்
விமானம், சாகை
இலங்கையில் பழைய மதம்
உற்சவம்,
மகாபாரதத்தில் சைவம்
கிரியை, சைவநெறி
ஆச்சாரியர்கள்,
தென்னாசியாவில் இந்துநாகரிகம்
இன்னும் பல

விலை — ஐந்து ரூபா

க. சி. குலரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொடிமரத்தை துவஜதம்பம் என்பர். அதற்கு விருதண்டம், மேரு தண்டம் என்றும் பெயர். அது மூலஸ் தானத்திற்கு நேராக அமைகிறது. அது விமானத்தின் உயரத்திற்கு அளவானது. அது வகுளம், தாலம், மூங்கில், வில்வம், கருங்காலி, பலாச, தேவ தாரு, தென்னை என்னும் ஏதாவதொரு மரத் தால் ஆனது. அதன் உயரத்தில் ஐந்தில் ஒரு பாகம் நிலத்தில் புதைக்கப்பெறும். அதில் முப்பத்துமூன்று கணுக்கள் அமையும். அவை எங்கள் முதுகின் முள்ளந்தண்டின் கோவை களின் எண்ணிக்கை. கொடிமரத்தின் மூன்று பாகங்கள் பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திர பாகம். பிரம்மபாகம், கீழ்ப்பாகம் சதுரமானது. விஷ்ணுபாகம் இடைப்பாகம் எண்கோணமானது. மேலேயுள்ள உருத்திரபாகம் விருத்தமானது. கொடிமரத்தில் உருத்திரர், சக்தி, திக்குப்பாலகர் அர்ச்சிக்கப் பெறுவர். யோகி ஒருவர் தமது மூச்சை நடு நாடியாகிய சுழுமுனையில் நிறுத் திக்கொண்டு தியானத்தில் சிவ சிந்தனையில் அசைவற்று இருப்பதைக் குறிப்பது போல் உள்ளது கொடிமரம். அது இருதயத்தானம் எனவும் வழங்கும்.

"வாயுநிற்ப மனநின்று மனந்தாநிற்பப் பொறிநின்று
பாயபொறி கணிற்ப விடர்ப்படுபுன் புலன்கணின்றனவால்
ஆயபுலன் கணின்றனவால் அகிலந்தோன்று துள்ளத்தே
தூய பரமானந்தபரஞ் சோதி தோன்றக் கண்டிருந்தார்."

எங்கும் வியாபித்துச் சிவமயம் எனவுள்ள இறைவனை கொடிமரம், உற்சவ மூர்த்திகள், கும்பம் ஆகியவற்றில் எழுந்தருளச்செய்து, ஆவாகனம் பண்ணிக் கொள்வதற்கு யாகங்கள் பூசைகள் செய்வர். கொடிமரப் பூசை அமைதியாக இருந்து பார்த்து அனுபவிக்க வேண்டியது. அது பகலிலும் இரவிலும் நடைபெறுகிறது. கொடிமரப்பூசை ஸ்தம்ப பூசை, மற்றயவை விம்பபூசை, கும்பபூசைஎனப்பெயர் பெறும். கொடிமரப் பூசை, வசந்தமண்டபப் பூசை, யாகசாலைப் பூசை என அனைவ் அமைகின்றன.



உடம்பை எடுத்த உயிர் ஈடேறும்வகையில் கொடிமரமாயுள்ள சிவத்தைப்பற்றி மேலே உயருகிறது. ஆன்ம ஈடேற்றம் உண்டாகிறது. ஆன்மா மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களையும் கடந்து மேலேபோவதே கொடியேற்றக் குறிப்பு. உள்ளே அமைந்த குண்டலினி சக்தி, முதுகெலும்பு வழியாக மேலே எழுந்து உச்சியை அடைந்தால் சொல்லவும் முடியாத பேரின்பம் உண்டா கும் என்பர். அதையே வாய்விட்டுச் சொல்லாமல் குறிப்பால் கோயிலில் வணங்குகிறார்கள். கொடி மரத்தின் உச்சி பிரமரந்திரம். அதுவே எல்லையில்லாப் பெருவெளி.

அறம்பொருள் இன்பம் வீடு என்பன புருடார்த்தங்கள். இவற்றில் முதலில் அமைவது தருமம் என்னும் அறம். நாம் அறவழியிலேயே நடத்தல் வேண்டும். அதுவே எம்மைக்காப்பது. தர்மதேவதையாய ஊர்தியைக் கொடிச் சீலையில் வரைந்து, தர்மத்தையே உயர்த்துகிறார்கள். தருமம் உயர நாம் உயர்வோம். கொடியேற்றத்தால் நல் வினை. ஞானம், கீர்த்தி, செல்வம், ஆரோக்கியம், ஆயுள் முதலாய ஐசுவரியங்கள் கிடைக்கும். முற்காலத்தில் கொடி யேறினால் பக்தர்கள் முகச்சவரம் செய்யார், தலைமயிர் கத்தரியார், பயணம் போகார், மங்கலகாரியங்கள் செய்யார், உடலுறவு கொள்ளார்; புதிய பாத்திரங்களில் புனிதமாகவே சமைத்து உண்பர். கட்குடியர், இறைச்சி மீன் உண்போர் அவற்றை எல்லாம் விடுத்து விரதம் அனுட்டித்துப் [illegible] அடியவர் பூசைசெய்து அன்னம்பாலிப்பர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இந்துநாகரிகம்

பொது சன நூல் நிலையம்
... உப அலுவலகம்
அனலைதீவு

## கொடிமரமும் கொடியேற்றமும்

திருக்கோயிலைச் சமீபித்தவுடன் தூலலிங்கமாய அழகுத் திருக்கோபுரத்தைத் தரிசித்துப் பாவவிமோசனமும் கோடி புண்ணியமும் கிடைத்து விட்டனவாகப் பாவனை பண்ணிக்கொண்டு கைகால் அலம்பி, வாய் கொப்பழித்துக் கண் துடைத்துச் சிறிதளவு நீரை தலையிலே புரோட்சித்துக் கொண்டு கோபுர வாசலை அடைந்து நின்று, துவார பாலகர்களிடம் அனுமதி பெற்றாற்போல அவர்களைக் கைகூப்பி வணங்கிக் கொண்டு உள்ளே நுழையும் போது ஆனந்தத்தையும் இதய சாந்தியையும் அளிக்கக்கூடிய சாந்நித்தியத்தை அடைகிறோம்.

வெளியில் வானத்தை நோக்கி எழும்பியுள்ள கோபுரம திருக்கோயில் அமைந்துள்ள இடத்தை தூரத்தில் வருபவர்களுக்கு காண்பித்தாற் போல, உள்ளே அமைந்துள்ளனவற்றுள் உயரமான அங்கம் அல்லது அமைப்பு கொடிமரம் ஆகும். மரத்தாலாகி வெள்ளியாலோ வேறு உலோகவகையாலோ கவசம் அணியப் பெற்றுயர்ந்து நிற்கும் கொடிமரம் என்னும் துவஜஸ் தம்பம் புனிதமானது.

உள்ளே எழுந்தருளியுள்ள இறைவனின் சாந்நித்தியத்துக்குரிய புனிதபூமி இது, என்று எல்லை வகுத்துக் காட்டினாற்போலமைந்தது கொடிமரம். கொடிமரத்துக்கும் கர்ப்பக் கிருகத்துக்கும் இடைப்பட்ட இடம் எவரும் கண்டபடி கால்வைக்கக் கூடாத புனிதமானதாகும். கொடிமரத்துக்கு முன்னுள்ள பலி பீடமும், அதற்கு முன்னுள்ள நந்தியோ, சிங்கமோ, மயிலோ, எலியோ எதுவானாலும் அதுவும் தத்துவப் பிரதிபலிப்பானது.

கொடிமரம் மூலாதாரம், பலிபீடம், சுவாதிஷ்டானம், நந்தி மணிபூரகம் என்னும் ஆதாரங்களைக் குறிப்பனவாகும். கொடிமரம் திருவருள் துணைகொண்டு ஆன்மா ஈடேறி மேலான உயர்ந்த நிலையை அடைவதைக் குறிப்பதாகும். ஆண்டுதோறும் அதிலே கொடி என்னும் துவஜத்தை ஏற்றுவதையே நாம் கொடியேற்றம் என்றும் துவஜாரோகணம் என்றும் பண்டைக் காலம் முதலாகப் பழகிக் கூறிவருகிறோம்.

கொடி ஏதாவது அடையாளம் இலச்சியம் எழுதிய துணியாகும். இன்று உலகில் கொடியுயர்த்தாத நாடு எதுவுமேயில்லை. ஐக்கியநாடுகள் தாபனத்திலே நூற்றைம்பதுக்கும் அதிகமான கொடிகள் உயரப் பறக்கின்றன. ஒரு கொடியைக் கண்டவுடன் அது குறிப்பாயுணர்த்தும் நாட்டையும், நாட்டின் மக்கள் வாழ்வு, பொருளாதார வளம், பண்பாடு, பலம், புலவர்கள், இலக்கியங்கள், உபகரிப்புகள் எல்லாவற்றையும் உணருகின்றோம்.

இந்த வழக்கம் தமிழர் சால்பில் மூவேந்தர் காலத்திலும் நிலவியது. வில், புலி, மீன் என்பன உயரப் பறந்தன. பல்லவர் நந்திக் கொடியை உயர்த்திய வகையில் யாழ்ப்பாணத்தரசர்களும் அதேகொடியினையுடையவராயிருந்தனர். முருகப் பெருமானின் கொடியில் உள்ள சேவலை கோழி என்றே வழங்குவர். வீரம்மிக்க சேவல் வலிமை வாய்ந்த பகைவரை நோக்கி, உங்களால் இயலுமாயின் என் தலைவனாய முருகனுக்குக் கிட்ட வந்து பாருங்கள் என்று வீரம் பேசுகிறதாம்.

இந்த வகையில் இறைவனுக்காயினும் அரசனுக்காயினும் உரிய தசாங்கங்கள் என்னும் பத்து அடையாளங்களுள், முதலில் கொடியையே புலவர்கள் போற்றுவர். "கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன் முடிபாடி முத்தாரம் பாடி" என்றெல்லாம் பாடல் பெற்ற அங்கங்களின் வரிசை அறிய வருகிறது. கொடியை அவமதித்தல் மன்னிக்க முடியாத குற்றம்.

திருக்கோயிலில் கொடிமரத்துக்கு வீணாதண்டம் என்றும், மேருதண்டம் என்றும் திருநாமங்கள் உண்டு.

## கொடியேற்றத்தில் சில நுட்பக் கருத்துக்கள்


கொடியேற்றம் என்றும், துவஜாரோகணம் என்றும், பிரமோற்சவம் என்றும் வழங்கும் பெருவிழாவில் சில நுட்பக்கருத்துகளும் உண்டு. நான் என்றும் எனது என்றும், ஆர்ப்பரித்து அகங்கரித்து நின்று நிலவுகின்ற ஆணவமல அரசு வலி இழக்கும். உயிர்கள் பேரானந்தம் பெறும். இதற்கு வழி மந்திரம் பிசகாமல், கிரியை திரியாமல், பாவனை பழுதாகாமல் திரிகரண சுத்தியோடு குருக்கள் கொடியேற்றுதல் வேண்டும். சிவ பெருமானின் திருவருள் நம்மீது பொழிவதற்கு அவர் கொடுத்தருளுவதைக் குறிக்கக் கொடி என்று தில்லைவாழ் அந்தணருள் ஒருவராய உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்துள்ளார்.

கொடியேற்றத்தின் போது பெருமான் அன்ன வாகனத்தில் எழுந்தருளுதல் பொதுவிதியும் வழக்கமுமாம். அன்னம் படைத்தல் தொழிலுக்கு அதிகாரியாய பிரமதேவனின் வாகனம். சிவபெருமான் பிரமதேவனை அதிட்டித்து நின்று படைத்தல் தொழிலைச் செய்தருளுகின்ருர் என்பதைக் குறிக்கவே, அன்றைய தினத்தில் அவர் அன்னமூர்கின்ருர் எனச் சொன்னவர்கள் பெரியவர்கள்.

★ ஓர் இந்திரியம் மற்றொரு இந்திரியத்தின் தொழிலை அறியாது ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயிலின் அமைப்பு



கடவுளுணர்வையும் கலைவாழ்வையும் கலந்து பி;தி பலிப்பது திருக்கோயில். திருக்கோயில் எழுச்சிமிக்கது. ஊரின் நடுவே அது கம்பீரமாக எழுந்து நின்று நிலவுகின்றது. அங்கே ஆன்மாக்கள் லயப்படும் வகையில் அது அமைந்துள்ளதாகலின் அஃது ஆலயம் எனப் பெயர் பெறுகின்றது. அன்றி நிலையம், நிகேதனம், பிராசாதம், பவனம், கோட்டம், நகரம், நியமம், விமானம் முதலிய பெயர்களும் திருக்கோயிலைக் குறிப்பனவாகும்.

பிற்காலத்தில் மாடக்கோயில்கள், குகைக்கோயில்கள், கற்கோயில்கள் கட்டப்பெற்றன. அரசர்கள், பேரரசர்கள், சேனாதிபதிகள் குடியிருப்பதற்கு மாளிகைகள் கட்டுவதற்கு முன், இறைவனுக்கு திருக்கோயில் அமைத்துப் பெருமை பெற்றார்கள். அவற்றின் பரிபாலனத்துக்கு வேண்டிய வருவாய்களை ஒழுங்கு செய்து அளித்தார்கள். திருக்கோயில்களைப் பத்தாண்டுக்கொருமுறை பழுது பார்க்கவும், பன்னிரு ஆண்டுகளுக்கொருமுறை கும்பாபிஷேகஞ் செய்யவும் நிதியுதவினார்கள்.

ஆலய நிர்மாணத்துக்குரிய அளவைகள், அளவுகள் உள்ளன. அவை மானாங்குலம், மாத்திராங்குலம், தேகலப்தாங்குலம் என்பனவும் பிறவுமாம். இந்த அளவைகள் விக்கிரகங்கள் முதலியனவற்றை அமைக்கும்போதும் வெவ்வேறு வகையில் கணிக்கப்படும். அவை மானம், பிரமாணம், உன்மானம், உபமானம், பரிமாணம், லம்பமானம் என்பனவாக வகுக்கப்படும்.

ஆலயங்களும் பிரதிமைகளும் அளவுடன் அமைதல் வேண்டும். அளவுப்பிரமாணம் அதிகமானால் நாட்டில் நோய், துன்பம் உண்டாகும். அது குறைந்தால் பகை, நலிவு முதலியன உண்டாகும்.

பிரதிமைகள் இளங்கல்லாலும் மூதிர்ந்த கல்லாலும் அமைதலாகா. எனவே யௌவன கற்களே பிரதிமைகள் செய்வதற்குரியனவாகும். அவற்றுள்ளும் ஆண், பெண், அலி வேறுபாடுகள் உள்ளன. ஆண் கல்லால் ஆண்பிரதிமைகளும் பெண் கல்லால் பெண் பிரதிமைகளும் உருவாக்கப்பெறுதல் வேண்டும்.

அலி என்னும் நபும்சக கற்களால் தளவரிசைகள், படிக்கட்டுக்கள் அமைக்கலாம் என்பது விதி. எந்தவித உபயோகத்துக்கும் கற்களில் ரேகை, களங்கம் முதலியன இருத்தலாகாது என்பது பொதுவிதி.

ஆலயத்தின் அமைப்பைச் சரீரப் பிரம்ம ஐக்கிய தேவாலயம் எனக் கூறுவர். அது சரீரப்பிரஸ்தானம் என்றும், இருதய பிரஸ்தானம் என்றும் இருவகைப்படும். இவற்றுள் சரீரப்பிரஸ்தானம் என்பது உடம்பின் உறுப்புக்களைப் போன்ற பகுப்புடன் உண்டாவது. இங்ஙனம் அமையும்போது ஆலயத்தின் கர்ப்பக்கிருகம் என்னும் ஆதிமூலம் தலையாகும். அர்த்தமண்டபம் கழுத்தாகும். மகாமண்டபம் மார்பாகும். யாகசாலை நாபியாகும். கோபுரம் பாதமாகும் என்று காரணாகமம் கூறுகின்றது.

ஆலயம் செங்கல், வெண்கல், கருங்கல், மணல், நீறு, நீர், காரம் முதலிய ஏழுவகைப் பொருள்களால் அமைதல் வழக்கம். இவை தோல், இரத்தம், மாமிசம், எலும்பு, மச்சை, மேதை, சுக்கிலம் முதலிய ஏழுவகையான தாதுப்பொருள்களைக் குறிப்பன என்பர்.

திருக்கோயிலின் அமைப்பைப் பார்க்கும் போது, அதில் எமது உடலமைப்பைப்போல அடி, உடல், தோள், கழுத்து, தலை, முடி என்பன புலனாகும். இவற்றைச் சிற்பசாஸ்திர முறையில் அதிஷ்டானம், பாதம், மஞ்சம், கண்டம், பண்டிகை, தூபி என்றெல்லாங் கூறுவார்கள்.

இவ்வாறாக நல்ல தரை அமைப்பே அடி எனப்படும். இதை அதிஷ்டானம், மசூரகம், ஆதாரம், தலம், பூமி என்றும் வழங்குவர்.

அடிப்பாகத்தின் மேலெழுந்த பாகம் கருவறை. இதனைக் கால், பாதம், ஸ்தம்பம், கம்பம் என்றும் வழங்குவர். கருவறை திருஉண்ணாழி எனவும் பெயர் பெறும்.

கருவறையின் மேல் உள்ளது தோள். அதை பிரஸ்தரம், மஞ்சம், கபோதம் என்றும் கூறுவர். அதற்கு மேலுள்ளது கண்டம். அதைக் களம், கர்னம், கழுத்து என்றும் வழங்குவர். அதற்கு மேலுள்ளது தலை. அதை சிகரம் என்றும் வழங்குவர். சிகரத்துக்கு மேலுள்ளது முடி. அதை ஸ்தூபி எனவும் வழங்குவர்.

★ ஆன்மா எல்லா இந்திரியங்களின் தொழில்களையும் அறியும் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோஷ்டங்கள்

கருவறைச் சுவரின் வெளிப்புறங்களில் கோஷ்டங்கள் என்னும் மாடக்குழிகள் அமைக்கப்படும். அவை கோஷ்டபஞ்சரம் என்றும், கும்பபஞ்சரம் என்றும் பெயர் பெறுவன. கோஷ்டபஞ்சரக் குழிகளில் கணபதி, தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரமன், துர்க்கை முதலிய திருவுருவங்கள் அமைக்கப் பெறும் வழக்கமும் உண்டு. இவ்வழக்கம் சோழமன்னர் காலத்திலேதான் உண்டானது என்பர்.

கோஷ்டபஞ்சரக் குழிகளுக்கு இடையிடையே கும்ப பஞ்சரங்கள் அமையும். இவற்றில் குடமும் அதிலிருந்து சிற்பவேலையோடு கூடிய கொடியும் அமைந்திருப்பக் காணலாம்.

## விமானம்

ஆலயத்தின் மிகவும் முக்கியமான அமைப்பு விமானம் என்னும் கட்டடமாகும். அது மூலஸ்தானம் என்னும் கர்ப்பக்கிருகத்துக்கு மேல் அமைவது. முற்காலத்தில் ஆலயத்தில் விமானமே மிகவும் உயர்ந்த அமைப்பாய் நிலவியது.

விமானம், நாகரம், திராவிடம், வேசரம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது. நாகரம் என்பது பூமி முதல் தூபி வரையில் நாற்கோணமாக அமையும் பாகமாகும். திராவிடம் என்பது எண்கோணமாக அமையும் மேற்பாகமாகும். வேசரம் என்பது மேலேயுள்ள விருத்தமான பாகமாகும்.

விமானத்தின் நாற்கோணங்களில் பிரஸ்தான கோணங்களில் பூதங்கள் அல்லது இடபங்கள் இடம் பெறுகின்றன. பூதங்களமையில் அவர்கள் கூப்பிய கரங்களுடன் இருக்கக் காணலாம். இடபங்கள் அமையின் அவை படுத்திருக்கும் கோலத்திலமையும். இவை எவையாயினும் மிகவும் அழகாகவும் அங்கப்பிழையின்றியும் அமைதல் வேண்டும் என்பது ஆகமவிதியாகும்.

## சுற்றுப்பிராகாரம்

சுற்றுப் பிராகாரங்களில் சந்நிதிகள் உண்டாக்கிச் சுவாமிகளை எழுந்தருளச் செய்யும் வழக்கம் பிற்காலத்தில் எழுந்ததாகும். சிவன் கோயில்களில் தெற்கு நோக்கிய அம்மன் சந்நிதிகள் உள்ளன. அம்மன் சந்நிதியில் கொடிமரமும் பலிபீடமும் நந்தியும் உள்ளன. அம்பிகைக்கென்றே ஆண்டுதோறும் கொடியேற்றம் நிகழ்த்தித் திருவிழாக்கள் நடத்துவதும் உண்டு. இத்தகைய அம்மன் வாசல் முறை விஜயாலய சோழ மன்னன் காலத்துக்குப் பின்னரே உண்டானது என்பர். அஃது இன்று ஆயிரம் ஆண்டுப் பழைமையாகிவிட்டது. பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் விநாயகருக்கும், வடமேற்கு மூலையில் சுப்பிரமணியருக்கும் விமானங்கள் அமைத்துத் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்யும் வழக்கமும் உண்டாகியுள்ளது. இங்ஙனமாகவே நடராஜமூர்த்திக்கு தனியிடமும் வகுக்கப்பெற்றுள்ளது. அவர் தெற்கு நோக்கி நின்றுடுதல் முக்கியமாகும். திருமுறை ஏடுகள் கண்டெடுக்கப்பட்டபின், அறுபத்துமூன்று நாயன்மாருக்கும் திருவுருவங்கள் செய்து பிராகாரத்தில் பிரதிஷ்டை செய்யும் வழக்கம் உண்டாகியுள்ளது. இதன் பின்னர் நவக்கிரகங்களுக்கும் இடமளிக்கும் வழக்கம் அண்மையில் உண்டானது. நவக்கிரகப் பிரதிஷ்டை இடம்பெறலாகாது எனவும் சிலர் கருதினுர்கள்.

---

உ

# கொடியேற்றம்

திருக்கோயில்களை எவ்வாறு அமைத்தல் வேண்டும், திருவுருவங்களை எவ்வாறு பிரதிட்டை செய்தல் வேண்டும் என்றெல்லாம் ஆகமங்கள் கூறும் வகையில் திருவிழாக்களை எவ்வாறு செய்தல் வேண்டும் என்றும் ஆகமங்கள் விதிக்கின்றன. ஆகம விதிகளைத் தவிர்த்து எது செய்தாலும் அது எதிர்ப்பலனைத் தரும். அந்த எதிர்ப்பலன், வறுமை, துன்பம், சீரிழிவுக்கேடு, முதலியவற்றைத்தரும். அவை கண்கூடு.

பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தம் எனவரும் தொடரில் உற்சவம் மேலான சுகத்தைத் தருவது என்பது பொருள். இங்ஙனம் சுகம் தரும் சுபீட்ச விழாவுக்கு ஆரம்பமே கொடியேற்றம்.

உலகம் என்னும் போது கடவுள், உயிர், பந்த பாசங்கள் ஆகிய முப்பொருட்களின் நினைவு வருகிறது. கடவுள் பதி என்னும் மேலானவர், நன்மையைத் தருபவர், சங்கரன் என்னும் நலன்புரி கொள்கைத் திருநாமம் பெற்றவர், பேரருளாளர், அவர் தமக்கு இயல்பாயுள்ள பேரருளினுலே ஆன்மாக்களுக்கு உய்தியளிப்பப்படாத பாடுபடுபவர். அவரின்றி நாம் அசையவே முடியாது.

உயிர்களாய ஆன்மாக்கள் உலகப்பற்று, பந்தம், பாசம் முதலியவற்றுள் சிக்குண்டு மொத்துண்டு, தள்ளுண்டு தளர்ந்து வாடித் தவிக்கும்போது; இறைவன் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார். ஆன்மாக்கள் தாங்கள் தாங்களே செய்து கொண்டு வந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்தநிலை பெத்தநிலை. எனவே ஆன்மாக்கள் பெத்தான்மாக்கள் என்னும் பெயர் பெறுகின்றன.

பெத்தான்மாக்கள் தாங்கள் படாதபாடு படும் போது சிறிதளவு சிவானுக்கிரகம் பெற்றுச் சித்தத்தைச் சிவன்பால் வைக்கின்றன. சிவனும் இவர்களின் பெத்தநிலையை நீக்கி, முத்தநிலையடையச் செய்வதற்கு ஓடோடி வருகிறுர்.

இதுவரை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களில் மூழ்கிக் கிடந்த ஆன்மாக்கள் அம்மலங்கள் நீங்கி அன்புருவாய அரன் திருவடியடைய ஆசைப்படுகின்றனர்.

உயிர்களாய ஆன்மாக்கள் கீழ்நிலையிலிருந்து மேல் நிலையை அடைவதைக் குறிப்பதே கொடியேற்றத்தின் சிறப்பு. அன்றி நாடு நாடாவதற்கும் நலம்பெறுவதற்கும் திருவிழாக்கள் அவசியமாகின்றன. திருவிழாத் தொடக்கத்துக்கு முன் பல்வேறு கிரியைகள் செய்கி

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ அந்தத்தைச் செய்யும் சிவபெருமானே ஆதியுமாவர் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்லூர் முருகன்



சிவபூமியாகிய இலங்கையின் சிரம்போல நிலவும் யாழ்ப்பாணத்துத் தலைநகராய் விளங்கும் நல்லூர் பண்டைக்காலம் தொடக்கம் பண்பாட்டுக்கும் பக்திக்கும் புகழ்பெற்று நிலவுவதாகும். மத்தியகாலத்துக்கு முன்னரே நல்லூர் வரலாற்றுப் புகழ் பெற்றிருந்தது. திருவாரும் நல்லை என்றும், இந்திரன் இருக்கை போலும் நல்லூர் என்றும் பூலோக கைலாசம் என்றும் புலவர்கள் போற்றும் நல்லூர் அருணகிரிநாதராலும் பாடப்பெற்ற சிறப்பினை உடையது.

பதினைந்தாம் நூற்றாண்டுக்கும் முன்னரே நல்லூர் பெரிய இராசதானியாக விளங்கியது. நல்லூரில் பழைய கந்தனாலயம் ஒன்றிருந்தது. அது சண்பகப்பெருமாள் படையெடுத்து வந்தபோது அழிந்து போகவே, சண்பகப்பெருமாள் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்னும் பெயரில் முடிசூடி அரசு செய்த காலத்தில் முத்திரைச் சந்தைவெளியில், கல்வித்திணைக்களத்துக்கு மேற்கில் பெரியதொரு ஆலயத்தைக் கட்டிச் சிறப்பொடு பூசைகள் செய்வித்தான். அவன் 1450 தொடக்கம் 1467 வரை அரசு செய்தபின், கோட்டே எனவும் வழங்கிய பழைய ஜெயவர்த்தனபுரம் சென்று, அங்கே ஆறாம் புவனேகபாகு என்னும் பெயர் பூண்டு அரசனானான். வடக்கில் அவன் சில வருடங்கள் ஆண்ட இடத்தில் தன் நண்பன் விஜயபாகு என்பவனை ஆளுமாறு செய்தான்.

இவ்வாறாக 1450 முதல் 1467 வரை தமிழ்நாட்டில் திருக்கோவலூரில் புகலடைந்திருந்த கனகசூரிய சிங்கையாரியனும் மைந்தர் பரராசசேகரன், செகராசசேகரன் ஆகியோரும் யாழ்ப்பாணம் மீண்டு, விஜயபாகுவை இலகுவில் வென்று, தம் நாட்டையும் தம் அரசையும் மீட்டுக்கொண்டனர்.

தமிழர் வலிமையோடு ஆளத் தொடங்கியதும் 1467இன் மேல் நல்லூர்க்கோயிலைக் அழகாகக் கட்டியதோடு, நாற்புறமும் வேறு கோயில்களைக் கட்டியபோது கிழக்கில் வெயில் உகந்த பிள்ளையார் கோயில், தெற்கில் கைலாசநாதர் கோயில், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோயில், தெற்கில் சட்டநாதர் கோயில் ஆகிய நாற்புறக் கோயில்களையும் நன்றாக அமைத்தான். பின்னர் 1621ஆம் ஆண்டில் பறங்கியர் என வழங்கிய போத்துக்கேயர் படையொடு வந்து எல்லாவற்றையும் பாழாக்கி 37 ஆண்டுகள் கொடுங்கோலாட்சி செய்து, ஒல்லாந்தருக்குத் தோற்று நாட்டைவிட்டுப் போயினர். ஒல்லாந்தர் 1658 முதல் 1796 வரை அரசு செய்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு கச்சேரி அமைந்தது.

கச்சேரியில் பெரிய சிறுப்பராய் இருந்தவர் நல்லூரைச் சேர்ந்த இரகுநாத மாப்பாண முதலியராவர். இவர் அரசாங்க அதிபரிடம் இதமாகப் பேசி, உத்தரவு பெற்று ஒரு வேற்கோட்டத்தை அமைத்தார். சில ஆண்டுகளில் இவருக்கு மன்னார்க் கச்சேரிக்கு உத்தியோகமாற்றம் கிடைப்பவே, இவர் தமது நம்பிக்கைக்குப் பாத்திரராய பிரம்மஸ்ரீ கிருஷ்ணஐயர் சுப்பையர் என்பாரிடம் கோயிலை ஒப்படைத்து குதிரைவண்டியேறி மன்னாருக்குச் சென்றார். ஆனால் அவருடைய மனம் நல்லூரிலும் உடம்பு மன்னாரிலுமாக இருப்ப. அவர் வேலையிலிருந்து ஒய்வு பெற்று மீண்டும் வந்து கோயிற்காரியங்களை கவனித்து வந்தார்.

அன்று 1734 தொடக்கம் இன்று 1987 வரை அவருடைய வழித்தோன்றல்களே நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் பரிபாலித்து வருகிறார்கள். அடியார்கள் அயரா அன்பில் பெரிய திருப்பணி வேலைகள் செய்து வந்துள்ளார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இங்கே கந்தபுராணபடனஞ் செய்ததும் உண்டு. கந்தபுராணப் படிப்பைப் பெருமளவில் செய்வதற்குத் தென்புறத்தில் ஜானகி அம்மாள் என்பாரிடம் 1872ஆம் ஆண்டில் நிலம் வாங்கியதும் உண்டு. திருப்பணி வேலைகளுக்கு அறங்காவலருக்கு உதவியாக நின்று கருங்கல் எடுப்பித்துக் கொடுத்ததும் உண்டு. பல திருத்தங்கள் செய்வவற்குப் பெருமுயற்சி எடுத்ததும்உண்டு.

இன்று அறங்காவலராய் இருக்கும் திரு. குமாரதாஸ் மாப்பாண முதலியார் பெயருக்கேற்ப முருகபக்தனாய், முருகதாசனாய் முழுநேரப் பணி புரிந்து வருகிறார். நிர்வாகத்திறமை, பூசையொழுங்கு, கட்டடச் சிறப்பு, வீதி விசாலம், அடியார் கூட்டம் இன்ன பல சிறப்புக்கள் உலகப்புகழ் பெற்றுள்ளன. உல்லாசப் பிரயாணிகளும் பயபக்தியோடு பணிந்து போற்றிப் போகிறார்கள்.

நூற்றுக்கணக்கான புலவர்கள் முருகனைப் பாடாமல் இருக்க முடியாமல் பாடிக் குவித்த பிரபந்தங்கள் பலவாயுள்ளன. முருகபக்தர் உள்ளத்தில் அலங்காரக் கந்தன் என இடம்பெற்ற வேலவன் திருவருள் வெள்ளம் பெரிது. தேரடியில் நின்று தெரிசித்தால் போதுமென்றார் யோகியார்.

கடையிற்சுவாமியார் முதல் சிவயோக சுவாமியார் வரையுள்ள ஈழத்துச் சித்தர் கூட்டம் நல்லூரானை வணங்கி உரையாடி ஞானம் பெற்றமை வரலாறு. சேனாதிராச முதலியார், பரமானந்தப் புலவர், ஆறுமுகநாவலர், வண்ணை செல்லையா புலவர், குகதாசர், சபாரத்தின முதலியார், சோமசுந்தரப் புலவர் முதலானோர் வெகு உருக்கமான பிரபந்தங்கள் பாடித் துதித்துள்ளார்கள்.


இன்று பரந்துபட்ட உலகில் அமெரிக்கா, கனடா பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க் நோர்வே, நைஜீரியா, சௌடி, மலேசியா முதலிய நாடுகளெங்கும் பரவி வாழும் எம்மவர் நல்லூரானை நாள்தோறும் கும்பிட்டு வாழ்கின்றார்கள். ஆண்டுதோறும் திருவிழாப் பார்ப்பதற்கு வந்து போகிறார்கள். நல்லூரானை நம்பி நாவினிக்கப் பாடி நலம் பெற்று வாழ்கின்றார்கள். நல்லூரான் தடங்கருணைப் பெருங்கடல். இந்தக் கருணைக் கடல், கிருபா சமுத்திரம், அலைமோதும் போது ஒரு துமி பட்டாலே போதும். ஆன்ம ஈடேற்றம் உண்டு. இது சத்தியம், சத்தியம், முக்காலும் சத்தியம்.

★ சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவர் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விமானம்



முற்காலத்திலே திருக்கோயிலுக்கு விமானம் என்றும் பிராசாதம் என்றும் பெயர்கள் வழங்கின. விமானம் அக்காலத்தில் நிலவிய உயரமான அம்சம். விமானத்தின் கீழேயே கருப்பக்கிருகம் என்னும் மூலஸ்தானம் அமைந்தது. மூலவர் எழுந்தருளிய இடம் அது. இன்று கர்ப்பக்கிருகத்துக்கு மேலே கட்டப்பெறும் அமைப்பு மாத்திரமே விமானம் என வழங்குகிறது. ஆனால் சிற்ப சாத்திரங்களில் விமானம் எனக் குறிக்கப்பெறுவதும் கர்ப்பக்கிருகமேயாம்.

கர்ப்பக்கிருகத்தின் கீழ்ப்பாகம் ஜகதி எனப்பெயர் பெறும். அதற்கு மேலே கட்டப்பெறும் சுவர்கள் கடி எனப் பெயர் பெறும். சுவர்களில் உள்ள வேலைப்பாடுகள் பத்மம், குமுதம், காந்தம் எனப் பெயர் பெறுவனவாகும். விமானத் தளத்தின் அலங்காரங்களுள் ஓரினம் தோரணங்கள் எனப் பெயர் பெறும். அவை மகரதோரணம், பத்ரதோரணம் முதலாகப் பலவிதங்களில் அமையும்.

விமானத்தின் மேற்பாகத்தை க்ரீவ என்பர். அதற்குமேல் உள்ளது சிகரம். சிகரத்தின் உச்சியில் கலசம் அமையும். பொதுமக்கள் பக்திப்பாடல் ஒன்றில் சிகரம் தெரியுதாம் என்று பாடியுள்ளார்.

பிற்காலச் சோழப் பேரரசர்கள் கற்கோயில்களை அழகாக அமைத்தபோது, அவர்கள் கருப்பக்கிருகங்களை உயரமாகவே கட்டினார்கள். அவற்றில் பலவித சிற்ப வேலைப்பாடுகளை நுணுக்கமாகச் செய்தார்கள்.

இராசராச சோழன் அமைத்த தஞ்சைப் பெருங் கோயில் விமானமும், அவன் மைந்தன் கங்கைகொண்ட சோழன் என்னும் இராசேந்திரன் அமைத்த விமானமும் சோழமன்னர்கள் காலத்து விமானத்துக்கு எடுத்துக்காட்டாகும். அக்காலத்தில் விமானமே முக்கியமானதாயும் உயர்ந்ததாயும் அமைந்தது.

விமானம் நன்றாக அமைக்கப் பெற்றது என்பது கருத்தாகும். ஆகமவிதிகளுக்கு அமைய அமைந்த விமான அமைப்பில் கணித நூற்படி அமைந்த நுணுக்கத்தையும் காணலாம். விமானத்தை பிரமரந்திரம் என்னும் சகஸ்ராரச் சக்கரத்தின் குறி என்பர். அது ஆயிரம் அடுக்குள்ள இரண்டடுக்குத் தாமரை.

# சாகை

பாடினார் சாம வேதம் என்றும், சாகையாயிரம் உடையார் என்றும், சாமவேத கந்தர்வம் விரும்புமே கபாலமேந்து கையனே என்றும், சந்தோக சாமம் ஓதும் வாயானை என்றும் அப்பர் சிவபெருமானைப் பாடுகிறார்.

வேதங்களை வகுத்த வியாசர், ஒருவன் எவ்வளவு பாகத்தை அத்தியயனஞ் செய்து சிரேயசை உண்டாக்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவையும் அவர் சாமம் என வகுத்தார். சாகை என்பது வேதத்தின் பிரிவாயிற்று. வேதங்கள் தோறும் சாகைப் பிரிவுகள் உண்டு.

இருக்கு வேதத்தில் ஐதரேய சாகை மாத்திரம் கிடைத்துள்ளது. யசுர் வேதத்தில் காண்வ சாகை தைத்திரிய சாகை, மாத்தியந்தன சாகை என்னும் மூன்றும் கிடைத்துள்ளன. சாமவேதத்தில் கௌதம சாகை, தலவகார சாகை என இரண்டுள்ளன. அதர்வவேத சாகை எதுவுமே கிடைப்பதில்லை.

வியாசர் காலத்தில் 1180 சாகைகள் இருந்தன. சாகைகளில் கருமங்கள் கூறப் பெற்றுள்ளன. கருமங்கள் கடமைகளாகிப் பெருமதிப்புப் பெறவே ஒரு சாகையை அட்சரந் தவறாமல், ஓதவேண்டிய முறையில் உதாத்தம், அனுதாததம், சுவரிதம் பிரசயம் தவறாமல் ஓதும் ஒருவனுக்கு அரசன் சுரோத்திரி என்னும் பெயரில் வரி விலக்குள்ள கிராமத்தை வழங்குதல் வழக்கமாயிருந்தது.

## சாகையின் பிரிவுகள்

வேதங்கள்தோறும் உள்ள சாகை ஒவ்வொன்றும் மூன்று பிரிவுகளாக உள்ளன. அவை மந்திரம், பிராம்மணம், உபநிஷத் என்பனவாம். உபநிஷத் ஈற்றில் வருவதால் அந்தம், முடிவு, சிரசு என வழங்கும். வேதத்தின் அந்தமாகலின் வேதாந்தம், அதன் முடிபாகலின் வேத முடிவு, அதன் சிரசு ஆகலின் வேத சிரசு என்றெல்லாம் உபநிடதம் பெயர் பெறும்.

மந்திரத்தை முறைப்படி உச்சாரணம் செய்தால் புண்ணியம் கிடைக்கும். மந்திரம் தெய்வாம்சமானது. தெய்வாம்சங்களை விளக்குவது. நினைப்பவனைக் காப்பது, பரிசுத்தமானது. தெய்வங்களின் சொரூபங்களை அறிவிக்கும் அந்த அந்த மந்திரத்தைச் சொல்லி நல்ல முறையில் ஓமத்தீயில் ஆகுதி செய்தால், ஆகுதிப் பொருள்கள் அந்த அந்தத் தெய்வத்தை அடையும். ஓமத்தில் ஆகுதி செய்வதை திரவியம் என்றே வழங்குதல் மரபு. (முத்திரையொட்டிய தபாலைத் தபாற்பெட்டியில் இட்டால் உரிய விலாசகாரரிடம் தபால் சேருகிறது. முத்திரையொட்டுதல், விலாசம் எழுதுதல், தபாற்பெட்டியில் இடுதல் முக்கியம். அதுபோல ஓமகுண்டம், மந்திரம், திரவியசுத்தம் முதலியனவும் அமையும்)

ஓமத்தீயில் இடுபவை ஈசுவரார்ப்பணமாகும். பீமன் மானசீகமாக கண்ணிற் கண்ட மலர்களைச் சிவ

(13ஆம் பக்கம் பார்க்க)

★ மகாசங்காரத்தைச் செய்தருளுபவர் பரமேசுவரன் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இலங்கையில் நிலவுகின்ற பழையமதம் இந்துமதம்

தென்னாசிய, தென் கிழக்காசிய நாடுகளின் மிகப் பழைய மதம் இந்துமதம். இந்துமதம் என்னும் பெயர் அமைவதற்கு முன்னரே இம்மதம் வேறுபல பெயர்களில் பரந்து நிலவியது. புத்தசமயம் பிறந்ததனையே இந்துசமயம் பார்த்துக் கொண்டிருந்தது. புத்தர் இந்துசமயத்தின் சில கிரியைகளை மாற்றுவதற்கு முயன்றவர். சேர். இராதாகிருஷ்ணன் புத்தசமயம் இந்துசமயத்தின் புதுக்கிளை என்பர்.

இந்துமதம் பல நாடுகளில் நிலவியதெனவே பல மொழிகள் பேசிய மக்கள் அதனை மேற்கொண்டொழுகினராதல்வேண்டும். திராவிட ஆரிய ஒஸ்ரிக்மொழிகள் பேசிய மக்களின் பங்களிப்பு இந்துசமயத்தில் கலந்துள்ளன.

ஈழத்தில் வாழ்ந்தவர்கள் அண்மையிலுள்ள தமிழ் நாடென்னும் தென்னிந்தியாவின் போக்கிலேயே போய்க்கொண்டிருந்தனர். இலங்கைக்கும் பௌத்தம் வந்தபோது இந்துசமயம் பரந்திருந்தது. பௌத்தம் வந்த பின்னரும் இந்துசமய பழக்கவழக்கங்கள் மாறுமலே நிலவி வந்தன.

சிங்களவர்கள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் தென்னிலங்கை வாசிகளும் இந்துசமயத் தெய்வமூர்த்தங்களைப் பயபக்தியோடு கணே தெய்வம், கதிர்காமத் தெய்வம், தண்டம் புரியும் தெய்வம், விஷ்ணு தெய்வம், பத்தினி தெய்வம், ஈஸ்வர தெய்வம், என்றெல்லாம் வணங்கி வந்தனர்.

சிவனை ஈஸ்வரனாகிய பெருந்தெய்வம் எனப்போற்றிய அவர்கள் தங்களுட் பலருக்குச் சிவன் என வரும் விருதியமையப் பெயர்கள் இட்டுக் கொண்டமையும் உண்டு. பௌத்தமதம் இலங்கையிற் பரவிய முறையில் தென்னிந்தியாவிலும் பரவியது. ஆனால் இலங்கையில் புத்தசமயம் சம்பந்தமாக எழுந்த நூல்களை விட மிகவதிகமான நூல்கள் தென்னிந்தியாவில் தமிழில் எழுந்தன. எத்தனையோ இலக்கிய நூல்களும் இலக்கண நூல்களும் பௌத்தம் பேசுகின்றன. இவ்வாறு வளர்ச்சி பெற்ற பௌத்தத்தை சமணம் மட்டம் தட்டிய வரலாறு திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் வருகிறது.

மருணீக்கியார் சமணசமயஞ்சார்ந்து, அதனை நன்ருகக் கற்ருற் போலப் பௌத்தத்தையும் கற்று, பௌத்தர்களோடு வாது புரிந்து அவர்களை வென்று சமணத்தை நிலைநாட்டியதால் சமணர் அவரைத் தங்களில் மேலாகக் கருதி தருமசேனர் என்னும் பட்டப் பெயரும் வழங்கினர். அவர் பின்னர் சைவம்சார்ந்து திருநாவுக்கரசராய் அப்பராய்த் தேச பிதாவாய்ச் சைவசமயப் புனருத்தாரணம் செய்தவர்.

தமிழ் நாட்டிலிருந்து அகன்ற பௌத்தம் தென்னிலங்கையில் வேரோடியது. அக்காலத்தில் இலங்கை முழுவதிலும் செல்வாக்குள்ளிருந்த தமிழர் பௌத்தத்துக்கு தானங்கள் கொடுத்ததும் உண்டு. பௌத்தம் அரசறிய பெருமை பெற்று வந்தபோது, பொதுமக்கள் மத்தியில் நாட்டார் வழிபாட்டு முறைகளில் நாத, முருக, சிவ, பத்தினி வழிபாடுகள் நிலவி வந்தன.

பௌத்தமத விகாரைகளில் ஐம்பொன்னாலாகிய விஷ்ணுவின் திருவுருவங்களும் விநாயகரின் சிலா வடிவங்களும் அதிகமாகவுள்ளன. இனி பௌத்த பிக்குகள் பழைய காலத்தில் தங்கள் சமயத்தையே வளர்ப்பதில் ஈடுபட்டு வந்தபோதிலும் பொதுமக்கள் தங்கள் குறைகளைக் கிராம தெய்வங்களிடம் விண்ணப்பித்து நேர்த்திக்கடன் செய்து வந்ததும் உண்டு.

இவ்வாருக மத்திய காலத்தில் ஜெயவர்த்தனபுரத்தில் அரசு வீற்றிருந்த பராக்கிரமபாகுவின் காலத்தில் சைவாசாரம் அரண்மனையிலேயே நிலவியது என்பர். அவருடைய அரசோலக்கத்தில் பழைய தமிழ் அரசர் மத்தியில் புரோகிதர் இருந்தாற் போல சைவக்குரு ஒருவர் இருந்தார். அவரின் வேருய் இருந்த சிங்கள தேரர் தோட்டகமுவராகுல எனப் பெயர் பெற்றவர். அவர்தம் மன்னருடைய மகள் உலகுடைய தேவி வயிற்றில் ஆண்பிள்ளை உதித்தல் வேண்டும் என்று விபீஷணத் தெய்வத்திடம் மலைநாட்டு மைனாப் பறவையைத் தூது விடுத்தார்.

அந்நூல் செலலிஹினி சந்தேச என வழங்குவதாகும். அதிலே 108 பாடல்கள் உள்ளன. பாடல் யாவும் தமிழ் மரபில் அமைந்தாற் போல நான்கடிகளாயுள்ளன. நூலில் பிர்ஹஸ்பதி, அஸ்வினி தேவர், இந்திரன், எழிசை முதலிய பெயர்கள் பலவும் வருகின்றன. இருபத்திரண்டாம் இருபத்துமூன்ரும், இருபத்து நான்காம் பாடல்கள் தமிழ் மயமாகவே ஒலிக்கின்றன. சைவசமயம் ஒலிகாலுகின்றது. சிவபெருமான் திருக்கோயிலை ஈஸ்வர தேவாலய என்கிருர். இலங்கை ஈஸ்வரங்களால் பொலிவு பெற்றவுண்மை இங்கே தொனிக்கிறது. அங்கே கொடி பறக்கிறது. கர்ப்பூரம் எரிகிறது. கமழ்கிறது. இடிமுழக்கம் போலச் சங்கொலி முழங்குகிறது. மிருதங்கம் ஒலிக்கிறது. மணிகளின் ஓசை கூட்டாக ஒலிக்கிறது. மக்கள் மெய்மறந்து பக்தி பூர்வமாகத் தமிழில் தேவாரம் பாடுகிருர்கள். ஐந்துவிதமான இசைக்கருவிகள் ஒலிக்கின்றன. காலைப்பூசை அருமையாயிருக்கும். கண்விழித்துப் பார்த்தல் வேண்டும் என்றெல்லாம் மைனாவுக்கு புத்தசமய புலவர் அறிவுறுத்துகிருர். (தெமள மனகல் இசுறு கோவில்) என்பன சிங்கள பதங்கள்) அப்பால் சூரியபகவான், இந்திரலோகம், கற்பகதரு, காராம்பசு, சிந்தாமணி முதலானவை பற்றிப் பாடுகிருர். சைவம் மணக்கிறது.

சிங்களவர் வருகை என்னும் விடயம் பற்றி எழுதிய பேர்ணியோலா என்பார், புதிய லங்கா என்னும் சஞ்சிகையில் சில தகவல்களைத் தந்துள்ளார். சிங்களவர் முற்று முழுதாகத் திராவிடரால் உருவானவர் என்பர். (10ஆம் பக்கம் பார்க்க)

★ உலகம் உன்பொருள், அது முத்தொழில் வயத்தது ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# உற்சவம்

ஆலயம் ஆன்மாக்கள் லயப்பட்டு வழிபட்டு நெறிப்பட்டு மேலான நிலைக்குப் போவதற்குக் கொழு கொம்புபோல உள்ளது. கொடியேற்றத்தில் பதியாகிய கொடிமரத்தில் கொடி படருவதைக் கண்டறியலாம். ஆலயம் மானத பூசையின் உண்மையை விளக்கி சிவ ஞானத்தை உண்டாக்கும் இடமாகும். இவ்வாறே உற்சவங்கள் ஆன்ம சுகத்தைத் தருவதோடு, பஞ்ச கிருத்தியம் என்னும் ஐந்தொழில்களையும் உணர்த்துவனவாகும்.

உற்சவங்கள் பலவகையாக நடைபெறுகின்றன. அவை பைத்ருகம், சௌக்கியம், ஸ்ரீகரம், பார்த்திவம், சாத்விகம், சைவம் என்பனவும் இன்னும் வேறுகவுள்ளனவுமாம். இவை பன்னிரண்டு (பதினொன்று?) ஒன்பது, ஏழு, ஐந்து, மூன்று. ஒன்று என நாட்கணக்காக நடைபெறுவனவாகும் என்பர். இனி பதினொன்று பதின்மூன்று, பதினைந்து, பதினேழு, பத்தொன்பது, இருபத்தொன்று, இருபத்துமூன்று, இருபத்தைந்து நாள்கள் நடைபெறுவனவுமாம். இவை புத்தி, கௌமாரம், சாயுத்ரம், சாந்தரம், சௌரம், சாவரம் என்றெல்லாம் வழங்கும்.

உற்சவங்கள் "செயல்கள் யாவும் நோக்கமுடையன" என்னும் உளநூலார் கொள்கைக்கேற்றனவாய் கடவுளை மகிழ்வித்தல், போகம், சிவப்பிரியம், சர்வ சித்தி, முத்தி முதலியவற்றோடு; இன்னும் பொதுமக்கள் சுகம், உலகசுபீட்சம் முதலிய ஜனரஞ்சக நன்மையுமாம்.

ஆகம விதிகளுக்கு அமைய அமைந்த திருக்கோயில்களில் சிலா விக்கிரகங்கள் என்னும் கருங்கல் திருவுருவங்கள் ஆலயத்தின் உள்ளே பிரதிட்டை செய்து மருந்து சாத்தியிருப்பன. அவற்றைப் பெயர்த்து வெளியே கொண்டு வரமுடியாது.

கோயிலுக்குள்ளே புகமுடியாதவர்கள் நோயாளிகள், துடக்கு என்னும் தடை உண்டானவர்கள் முதலானோர் வெளியில் நிற்கும்போது, இறைவன் அவர்களை உள்ளிட்ட ஏனையோரையும் வந்து பார்த்தருளுவதற்கு வெளியே வருகிறார். அதற்காகவே செம்பு, பித்தளை, தங்கம் முதலியன கலந்த திருவுருவங்கள் அழகாகப் பலவித உருவங்களில் அமைந்துள்ளன. வெளியுலாவரும் திருவுருவங்கள் பொதுவாக பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, ஈயம் கலந்தனவாயிருப்பனவாகும். இவற்றைப் பஞ்சலோகப் படிமங்கள் என்பர்.

இவ்வாறாக உற்சவங்கள் என்னும் திருவிழாக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் மத்தியில் நடைபெற்றன என்பதைத் திருவள்ளுவர் "சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறுக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" என விளக்கியுள்ளார். இதில் நித்திய பூசையில் குறைவுகள் தீர்வதற்கு நடைபெற்ற நைமித்திய பூசைவிழாக்களையே சிறப்பொடு பூசனை என்றார் என உரையாசிரியர் கருதுவர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்துக்கு முன்னரே திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம், சித்திரைச் சித்திரை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆவணி மூலம், புரட்டாதி ஓணம், ஐப்பசி சதயம், கார்த்திகைக் கார்த்திகை முதலாய விழாக்கள் சிறப்பாக நடைபெற்றுவந்தன. இத்தகைய விழாக்களை "நீ காணாமற் போகிறாயோ?" என்று அவர் சமகாலத்துச் சிவபத்தரின் மகளின் மரணத்தைக் குறித்துப் பாடியருளினார்.

இனி நித்திய பூசைகளில் குறைவுகள் தீர்வதற்காக மிகுந்த கவனத்தோடு மந்திர லோபம், கிரியை லோபம், பாவனை லோபம் இல்லாமல் பூரணமாக நிறைவாகச் செய்யும் நைமித்திய பூசையில் காத்திராப்பிரகாரமாய் ஏதாவது தவறு நேர்ந்தால்; அதை நிறைவு செய்வதற்கும் பிராயச்சித்தமாக மன்றாட்டத்தோடு செய்யும் விழா பவித்திரோற்சவம் எனப் பெயர்பெறும். இதுவே பெருஞ்சாந்தி எனப் பேசப்பெற்றது.

பெருஞ்சாந்தி என்னும் பவித்திரோற்சவம் வேறு, கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கு வேறு, பவித்திரம் என்பது பரிசுத்தம்.

## உற்சவ வகைகள்

காமிகம் முதலான ஆகமங்கள் கோயில்களைப் பற்றியே அதிகமாகக் கூறுகின்றன. ஆகமமாகி நின்று அண்ணிப்பவன் சிவன் என்றும், ஆகமம் பெரிய விருப்பத்துக்குரியது என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளியுள்ளார்.

ஆகமங்கள் கூறும் உற்சவ வகைகளில் அயன உற்சவம், மாத உற்சவம், கார்த்திகை உற்சவம், திருவாதிரை உற்சவம்; இவ்வாறே பூசம், மகம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், மூலம், பரணி, திருவோணம் முதலாய நட்சத்திர நாள்களில் உற்சவங்கள் நடைபெறுதலும் உண்டு. இவற்றுக்கெல்லாம் பயன்கள் உண்டு என்று ஆகமங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன.

புண்ணியம், அரசதோஷ நீக்கம், விரும்பியவை பெறுதல், சகல பாபநிவாரணம், சௌக்கியம், சகல சம்பத்து, நிறைவு, முக்கியத்துவம், சௌபாக்கியம், சிலம், ஆயுள் நீடிப்பு, சுகபோகம் முதலிய பேறுகள் கிடைக்கும் என்ப.

இனி வார உற்சவம் என்னும்போது, ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி யாவும் நல்ல நல்ல என்று ஞானக்குழந்தை ஆணையிட்டு அருளும் வகையில் அவ்வவ் நாளுக்குரிய உற்சவங்களும் நன்மை தருவனவாகும். அவை ருத்திர பதவி, சௌக்கியம், கிராமலாபம், சகல காமியசித்தி, சாத்திராதிவித்தை, விஷேச செல்வம், அவமிருத்து நீக்கம் என்பனவும் பிறவுமாம்.

★ உலகம் மாறுதல் அடைவதற்குக் கருத்தா இருத்தல் அவசியம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## உற்சவகாலத்துக் கிரியைகள்

கிரியை யாவும் செய்யும் நற்கருமங்களேயாம். கிரியையென மருவும் அவையாவும் ஞானம் உண்டாவதற்கு வழி என்று சைவசித்தாந்தம் கூறும். மந்திர பூர்வமாகவும் பாவனை சகிதமாகவும் செய்யும் கிரியைகள் அற்புதமான பலன் தருபவை என்பதில் ஐயமில்லை. ஐயர் என்னும் தலைவர்கள் அவற்றைத் திரிகரண சுத்தியோடு செய்தால், காரிய சித்தி கைமேற்கிடைக்கும். ஐயர்மார் தம்மை இதற்கென்றே அர்ப்பணித்துச் செய்யும்போது, நாமடியோம் அவர்களுக்கு வேண்டுவன யாவும் குறைவறக்கொடுத்து வாழவைத்தல் கடன். நம்கடன் பணி செய்து கிடப்பதே என்றும், கூடும் அன்பினில் கும்பிடல் நம்கடன் என்றும் நாயன்மார்கள் நமக்கு வழிகாட்டியவர்களாவர்.

உற்சவகாலங்களில் ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் விருஷயாகம், துவஜாரோகணம், (கொடியேற்றம்) ப்ரகத்தானம், அங்குரம், யாகசாலை, அஸ்திரயாகம், பலிதானம், யானக்கிரமம், பரிவேஷம், நீராஜனம், கௌதுகம், திர்த்த சங்கிரணம், சூர்ணோத்சவம், தீர்த்தம், துவஜ அவ ரோகணம் (கொடியிறக்குதல்) ஸ்நபனம், விவாகம் (திருக்கல்யாணம்) பக்தோற்சவம் முதலான பதினெட்டுக் கிரியைகளாம். இவற்றை அஷ்டாதசக்கிரியை என்பர்.

## உற்சவம்
## பஞ்ச கிருத்திய விளக்கம்

சிவபெருமான் செய்தருளும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்கிரகம் எனப் பெயர்பெறும். இவற்றுள் சிருஷ்டி என்பது அங்குரார்ப்பணம், துவஜாரோகணம், ரக்ஷாபந்தனம் (காப்புக்கட்டுதல்) முதலியவற்றாலும்; திதி என்பது பல்வேறு வாகனங்கள் உலாவருதல், ஓமம் செய்தல், பலியிடுதல், முதலியவற்றாலும்; சம்ஹாரம் என்பது ரதோற்சவம் என்னும் தேர்த்திருவிழாவாலும், திரோபவம் மௌன உற்சவத்தாலும், அநுக்கிரகம் தீர்த்தத் திருவிழா (சகா யூடுதல் விழா) வாலும் அறியப் பெறுவனவாகும்.

இனிபத்துநாள் உற்சவங்களின் பயனே பழைய நூல்களில் கூறப்பெற்றுள்ளன. அவை முறையே, தூல் நீக்கம், ஸ்தூல் சூக்கும நீக்கம், மூவினை முக்குணம், முக்குற்றம் முப்பற்று நீக்கம். நான்கரணம் நால்வகைத் தோற்றம் நீக்கம் ஐம்பொறி ஐந்தவத்தை ஐம்மல நீக்கத்தையும், காமக் குரோத லோபமோக மத மாற்சரிய ஆறு குற்றநீக்கத்தையும், எழுவகை பிறப்பு நீக்கத்தையும், எண்குண விளக்கத்தையும், நவ பேத விளக்கத்தையும், பரானந்தக்கடலில் படிவதையும் குறிக்கும் என்பர்.

## உற்சவத்தின்போது
## இறைவன் ஊரும் வாகனங்கள்

பழைய காலத்துத்திருவிழாக்களின்போது சுவாமி எழுந்தருளி வருவதற்குப் பல வாகனங்கள் பயன்பெற்றன. அவ்வவ் வாகன மூர்வதற்குரிய பயன்களும் கூறப்பெற்றுள்ளன. அவையாவும் கருத்து நிறைந்தனவாய் விளங்கிக்கொள்ளல் கடினமாயுள்ளன. எனினும் விளக்கத்துக்காக ஒன்றிரண்டைக் கூறுகில், இடபம் இறைவனே பதி என்பதையும், அவர் தர்ம தேவதையை இடமாகக் கொண்டவர் என்பதையும் குறிக்கும். பூத வாகனம் பூதங்கள் தோறும் நின்றருள் செய்பவர் அவற்றின் மேலானவர் என்று, தத்துவாதீதர் என்றும் குறிக்கும். கைலாசவாகனம் இறைவனே கைலாசபதவியைக் கொடுத்தருள் புரிபவர் என்பதைக் குறிக்கும். ஆனைவாகனம் சுழிமுனை நாடியின் வழியாக இறைவனைத் தரிசித்தல் வேண்டும் என்றும், பிரணவதாரகன் இறைவனே என்றும் காட்டும். நந்தி வாகனம் ஆசாரியனை அதிட்டித்து நின்று ஆன்மாக்களைப் பரிபக்குவப் படுத்துவர் என்பதைக்குறிக்கும். குதிரை வாகனம் வாசி நாடியில் சுவாசாகார அஸ்வசாரியைக் காட்டும். வாசி என்பது சுவாசம் மேலும் கீழும் செல்வதாகும். இதனையே உமாபதி சிவாச்சாரியர் தமது திருவருட்பயனில் அஞ்செழுத்தருள் நிலையில் திருவருள் சீவனைச் சிவஞ் செய்து அதற்குத் திருமேனியாகவும் இருக்கும் என்பர். "வாசியருளியவை வாழ்விக்கும் மற்றதுவே ஆசில் உருவுமாம் அங்கு."

---

### கொடியேற்றம்
(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றூர்கள். யாகசாலை பிரதானமான இடமாயமைகிறது. அங்கே சக்திகளைக் கும்பங்களில் ஆவாகனஞ் செய்து எட்டுத்திக்குப் பாலகர்களைத் திருப்திப்படுத்தி மகிழ்வித்து, நாட்டின் சுபீட்சத்துக்குப் பாலிகைகளில் மூளைகள் எழும்ப நவதானியங்கள் வித்திட்டுப் பல் வேறு கிரியைகள் செய்கிறார்கள்.

"ஆலயம் வலமாய் வந்திட்டருள் கொடியேற்றுவித்து
மேலுளோர், மண்ணு ளோர்கள் விழவளி
செய்வதற்குச்
சாலவாக்கினைக் கேட்பித்துத் தழன்மிகு யாகசாலை
பாலினை யெய்தி மங்கை பங்கனர் பயின்றிருந்து"

இனி கொடியேற்றத்தைத் தொடர்ந்து நடைபெறுகின்ற உற்சவங்கள் என்னும் திருவிழாக்கள் நன்மை பயப்பன என்பதன் கருத்தும் அறிய வேண்டியதொன்றாகும்.

உற்சவம் என்பது உத்ஸவம் எனவுள்ளது. அது உத்ஸூயதே என்பதினின்றும் வந்தது. அது மேலான பரமேசுவரனுடைய கிருபாகடாட்சம் பொலியும் வெளியுலா வருகையாகும். இதனால் மக்கள் நல்வழிப்படுகிறார்கள் என்பது கருத்து. இதில் படைத்தல், தம்மை வெளிக்காட்டல், சுகத்தைக் கொடுத்தல், வந்து பார்த்தல் முதலியன அடங்கும்.

---

★ உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இதிகாசங்களிற் சைவம் - மகா பாரதம்



மகாமேரு மலையை வில்லாக வளைத்தருளிய சிவ பெருமானுக்கு வில்லி என்றும் திருநாமம் வழங்குகின்றது. வில்லிபுத்தூரர் தமிழில் தந்த மகாபாரதத்தில் 199 பாடல்கள் சுவி கூற்றாகவும், 70 பாடல்கள் பாத்திரங்கள் கூற்றாகவும் சிவன் பெருமை கூறுகின்றன. சிவபராக்கிரமமும் பரத்துவமும் கூறும் பாரதத்தை முதலில் அச்சேற்றியவர் தமிழ்நாட்டில் கோமளீஸ்வரன் பேட்டை இராசகோபாலபிள்ளை அவர்களாவர். அவர் பாரதத்தில் வரும் ஈஸ்வரபரத்துவ பாடல்களைத் தம்மிட்டம் போலக் களைந்து பதித்த அவலட்சணத்தைக்கண்டு வருந்திய ஆறுமுகநாவலர் அவர்கள் திருத்தமான முறையில் அதனை அச்சேற்றினார். அவரின் சகோதரி புதல்வர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள் பாரதப் படிப்பில் தலையாயவர். ஆதிபருவத்திற்கு அரியதோர் உரையுஞ் செய்தவர்.

வில்லிபுத்தூராரின் மைந்தன் வரந்தருவார் தந்த சிறப்புப் பாயிரத்தில் எடுத்த எடுப்பிலேயே சிவன் பெருமை பேசுவர். தேவார முதலிகள் மூவரில் இருவர் தோன்றிய நாடு தம்நாடு என்று பெருமிதங்கொள்வர்.

> "தேவரும் மறையும் இன்னமும் காணச்
> செஞ்சடைக் கடவுளைப் பாடி,
> யாவரும மதித்தோர் மூவரில் இருவர்
> பிறந்தநாடு இந்த நன்னாடு."

மன்னு மாதவன் என்று சிவன் பெருமையை மனசாரப் போற்றுவர்.

வில்லிபுத்தூரர் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கைலாச மலையைப் பாடும் போது. சிதம்பரம். திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவெண்ணெய் நல்லூர், திருவாலவாய் முதலிய சைவத் திருத்தலங்களையும் மரபு தவறாமல் மனங்கொள்வர்.

"எம்பிரான் இமவான் தந்த புரிகுழலோடு வைகும் புண்ணியப் பொருப்பு" என்றும், "எயில் ஒரு மூன்றும் செற்றோன் ஏந்திழை உடனே வைகும் கயிலையின் பெருமைதன்னைக் கட்டுரை செய்வது எங்ஙன்" என்றும் பாடுவர்.

அருச்சுனன் தீர்த்த யாத்திரை செய்தமையையும், அவன் பாசுபதாஸ்திரம் வேண்டித் தவஞ்செய்தமையையும் பாடும் போது, வில்லிபுத்தூரர் வெகுவாகத் தம்மை மறந்து, சிவனைப் புகழ்வர்.

> "ஆசில்நான் மறைப்படியும் எண்ணில் கோடி
> ஆகமத்தின் படியும் எழுத்தைந்தும் கூறிப்
> பூசினான் வடிவம் எலாம் விபூதியாலப்
> பூதியினைப் புரிந்தசடைப் புறத்தே சேர்த்தான்
> தேசினால்அப் பொருப்பின் சிகரம் மேவும்
> சிவன்இவனே போலும் எனத் தேவரெல்லாம்
> பேசினார் வரிசிலக்கை விசயன் பூண்ட
> பெருந்தவத்தின் நிலை சிலர்க்குப் பேசலாமோ"

வேதத்தையும் ஆகமத்தையும் ஏற்றுப் புகழ்ந்து பாடும் வில்லி புத்தூரர், திருமுறை பாடியவர்களைப் போலத் திருநீற்றையும் திருவைந்தெழுத்தையும் போற்றியுள்ளார். தவஞ்செய்த தனஞ்செயன் மனங்கொண்ட சிவனை வில்லி தாமும் உளங்கொண்டு உள்ளன்போடு பாடுவர்.

> "வலப்பாகம் செழும் பவளச் சோதிஎன்ன
> வான்நீலச் சோதிஎன்ன மற்றைப்பாகம்
> கலப்பான திருமேனி அணிந்த நீற்றால்
> கதிர்முத்தின் சோதியென மேலையின்ற
> குலப்பாவை உடன்கைலைக் குன்றின் வாழ்விற்
> குன்றுடையோன் திருக்கோலம் குறிப்பாய் உன்னி,
> புலப்பாடு புறம்பொசிய மார்பும் தோளும்
> பூரித்தான் உடல்புளகம் பூரித்தானே."

சிவப்பும் நீலமும் கலந்த மேனியினரை அன்று கண்டு பாடிய செந்தமிழ்ப் புலவர்கள் வரிசையில் வந்த வில்லியின் வழியில் சென்றாற்போல, இன்றைய விஞ்ஞானிகள் வானியலில் சிவப்பையும் நீலத்தையும் கண்டு, அவற்றின் சூசகத்தை அறிய முற்படுகிறார்கள். வில்லியம் யேம்ஸ் இதில் முயற்சியெடுத்ததும் உண்டு. அருச்சுனன் தனது தவநிலையில் சிவபெருமானை நினைப்பற நினைந்து நின்றுருகினான். அந்த நிலையைக் கூறும் வில்லிபுத்தூரரின் நெஞ்சும் உருகிற்று.

> "கூற்றினை உதைத்த பாதமும் உடுத்த
> குஞ்சரத்து உரிவையும் அணிந்த
> நீற்றொளி பரந்து நிலவெழு வடிவம்
> நிலாவெயில் அனல்உமிழ் விழியும்
> ஆற்றறல் பரந்த கொன்றைவார் சடையும்
> அல்லவை யாவையுங் கருதான்
> மாற்றம் ஒன்றின்றி நின்றனன் வரைபோல்
> வச்சிரா யுதன்இரு மகனும்"

(10ஆம் பக்கம் பார்க்க)

★ கலைஞானத்தை அனுபவ ஞானமாக்குபவர் விநாயகர் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதிகாசங்களிற் .......

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னொரு காலத்திலே திருமாலும் பன்றியாய்த் தேடரிய சிவபெருமான் திருவடியைத் தேடிச் சென்ற செய்தியைப் பாடுவர்

"ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும்
இருபாதத்து ஒருவன்"

என்பர். இன்னும் நான்முகனும் திருமாலும் கூட்டாகத்தேடியும் காணமுடியாமற் போனதையும் குறிப்பர்.

"புள்ளுடைக் கொடியோர் இருவரும்
காணாப் புண்ணியன்" என்பர்.

கண்ணன் தன் விறலை, வீரத்தைப் பேசும் போது, அருச்சுனனுக்குக் கண்ணன் அல்ல, சிவபெருமானே வந்து தேரோட்டினாலும் தான் வெல்வது நிச்சயம் என்றான். "சிவன் வந்து தேர் விடினும் வெல்வேன்" என்றமையால் சிவபெருமான் இறைமை மிக்கவர் என்பதும் அறியக் கிடக்கிறது.

பாரதம் முழுவதிலும் சிவபரத்துவம் பாடும் வில்லி புத்தூரர், சிவனைப் பல விடங்களில் உமைக்கு நாயகன், பச்சை மயில் பாதியன், மறைக்கு எட்டுதற்கு அரியவன், ஏறுடைக்கடவுள், பாபநாசக்கடவுள், வெள்ளிக் குன்றுடைப்புனிதன், பொன்னம்பலநாதன், முக்கண் அற்புதன், கற்றவர் கருத்தினாற் காண்போன் என்றெல்லாம் பாடுவர்.

காசி என்னும் வாரணாசியை வாரணாவதம் எனப் பாடும் வில்லிபுத்தூரர், அப்பதி சிவபெருமானுக்கே உரியது என்றும், அதனைப் புரோசன முனிவரும் குந்தியும் மைந்தரும் முறையாக வணங்கினர் என்றும் பாடுவர்.

"ஆர மார்புடை ஐவரும் குந்தியும்
பூர ஞான புரோசன நாமனும்
சேர வெண்பிறைச் செஞ்சடை வானவன்
வார ணாவதம் சென்று வணங்கினார்."

கதையின் போக்கில் மார்க்கண்டேயரின் சிவபக்தியை வியந்து, "சிவனை வழிபடும் மகவை அருளிய செனக சென்னியர்" என்றும், உமாதேவியாரின் தவத்தைவியந்து. "விடையோன் பாகன் திறை கொண்டவள்" என்றும், அர்ச்சுனன் திருவண்ணாமலையை தண்ணியதை, "முற்றா முகிழ் முலையாளொடு முக்கண்ணார் விரும்பும் சுற்றார் தொழும் அருணாசலம் அன்போடு கைதொழுதான்" என்றும், சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட் கொண்ட சிறப்பை, "ஐயானனன் இயல்வாணனை அடிமை கொள மெய்யே பொய் ஆவணம் எழுதும்பதி பொற்போடு வணங்க, மெய்யாகம அதிகைத்தரு வீரட்டமும்" என்றும், பிறவிப் பெருங்கடலை நீந்துதற்குச் சிவபெருமான் திருவடியை வணங்குதல் வேண்டும் என்று கருதிய அருச்சுனன் பொன்னம்பலத்தை வழிபட்டமையை, "இன்னம் பல யோனியில் எய்தா நெறி பெறவே பொன்னம்பலநாதன் கழல் பொற்போடு பணிந்தான்" என்றும் பாடுவர்.

இன்னும் அருச்சுனன் சிவசிவ என்று அருந்தவம் இயற்றிய அருமையை வியந்து, "அருந்தவம் முன்புரிந்தோரில் இவனைப் போல் மற்று ஆர்புரிந்தார் சிவசிவ என்று அரியவாறே" என்பர்.

சிவபெருமான் செய்தருளிய எட்டு வீரச்செயல்கள் வீரட்டம் எனப் புகழ் பெற்றவை. அவற்றைப் பல விடங்களிற் பரவிப் பாடும் வில்லிபுத்தூரர், "கூற்றினை உதைத்த பாதமும், உடுத்த குஞ்சரத்து உரிவையும், அணிந்த நீற்றொளி பரந்து நிலவு எழுவடிவும்" என உருகுவர்.

பண்டொரு காலத்தில் சிவபெருமானின் திருவடியைக் காண்பதற்குத் திருமால் பன்றியாகிப் பாதலம் எங்குந் தேடியபோது, காண முடியாத திருவடி அருச்சுனனுக்கு அருள் செய்வதற்கு ஒரு பன்றியைத் தேடிக் கொண்டு பாரில் வந்தமையைப் பக்தியோடு பாடுவர்.

"ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத்து ஒருவன் அந்தப் பேரேனம் தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான், புனங்கள் எல்லாம்" என்றும். இவ்வாறு புறப்பட்டான் ஈசன் பின்னால் உலகமெல்லாம் ஈன்றாள் முருகனைக் குழந்தையாக ஏந்திக்கொண்டு வந்தாள் என்பவர், "பாரேனை உலகனைத்தும் பரிவுடனே ஈன்றாள் தன்பதி பின் வந்தாள்" என்றும் பாடுவர்.

சிவபெருமானின் பரத்துவம் பாரடங்கியது என்பதைப் பாடுவதற்கு வாய்த்த சந்தர்ப்பம், அருச்சுனன் சிவனுக்கு வில்லால் அடித்தமையாகும். அவன் அடித்த அடி உலகமெங்கும் தாக்கியது. அதனை அற்புதமாகப் பாடும்போது, "வேதம் அடியுண்டன. விரிந்த பல ஆகமங்கள் அடியுண்டன.ஓர் ஐம்பூதம் அடியுண்டன" என்பர். மண், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களுள் அடங்காத பொருள் உலகில் எதுவுமே இல்லை என்பது விஞ்ஞான முடிபுமாகும். இங்ஙனமாக மகாபாரதம்என்னும் இதிகாசம் சிவபரத்துவம் கூறுவதில் மகத்துவம் மிக்கதாய் உள்ளது என்பது துணிபு.

---

## இலங்கையில் நிலவு .......

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிந்தியப் பெண்களும் கலைஞர்களும் பெருந்தொகையாக அன்றே வந்து உழவுத் தொழிலுக்கு ஊக்கமளித்தனர். உடந்தையாய் வாழ்ந்தனர். இலங்கையில் விளைந்த கறுவா தமிழ்மொழி மூலமே பெயர் பெற்றது. சேனன் குட்டிகன் என்பார் பெரிய வணிகர். அவர்கள் அரபு நாட்டோடு தொடர்பு கொண்டவர்கள்.

தமிழ்நாட்டுத் தொடர்பிலே தான் இலங்கையின் மொழி, இலக்கியம், கட்டடக்கலை, சிற்பக்கலை, சமய நம்பிக்கை, சாதிப் பிரிவு, யாவும் இங்கே உருவாகி நிலைத்தன என்பர். தமிழ்நாட்டுக்குரிய சைவத்தமிழ் பண்பாடு இலங்கையில் ஆழமாக வேரூன்றி அகலமாகப் பரந்து நிலைத்தது. அறுகுபோல் வேரூன்றி ஆல் போல் தழைத்தது எனக் கூறினும் அமையும்.

---

★ சீவான்மா பரமான்மாவை அறிவதற்கு உடம்பு தேவை ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கிரியை

உண்மையைக் கண்டு அநுபவித்த அநுபூதிமான்கள் அதை எல்லோரும் கண்டு பயனடைதல் வேண்டும் என்னும் பரந்த மனப்பான்மையினுல் அதனை அடையும் வழிகளை ஆற்றுப்படுத்தி விளக்கியுள்ளார்கள். அவ்விளக்கங்களில் செய்முறைகள் பலவுள்ளன. செய்முறைகளைக் கிரியைகள் என்றும், சடங்குகள் என்றும் அநுட்டானங்கள் என்றும் சம்ஸ்காரங்கள் என்றும் வகுப்பர்.

கிரியைகள் உண்மையானவை உயர்ந்தவை, பயன் தருபவை! பக்குவப்படுத்துபவை! மகிழ்ச்சியைத் தருபவை! சுபீட்சத்தை உண்டாக்குபவை! பொருள் பொதிந்தவை. அவற்றில் விஞ்ஞானம்! தத்துவம்! கல்வி! கலை என்பன யாவும் நிரம்பியுள்ளன. அவை அமைதியையும் ஆனந்தத்தையும் தூய்மையையும் பாதுகாப்பையும் தருவன. தனிமனிதருக்கேயன்றிக் குடும்பத்தவர் சமூகத்தவர் நாட்டவர் உலகத்தவர் எனவுள்ள எல்லோருக்கும் நன்மை புரிபவை.

வேதத்தில் கூறப்பெறும் வேள்விகளைச் செய்தால் வானஞ் சுரக்கும், வானஞ் சுரந்தால் வளங்கள் பல்கும், வளங்கள் பல்கினுல் அறங்கள் பரவும், அறங்கள் பரவினுல் உயிர்களுக்கெல்லாம் இன்பம் உண்டாகும், இன்பம் நிலைத்தால் செம்பொருளாகிய சைவம் ஓங்கும். சைவம் ஓங்கினுல் செங்கோல் வாழும். இவ்வாறு பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற் புராணத்தில் அருளியுள்ளார்.

மல்குக வேத வேள்வி
வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும்
பரவுக அறங்கள்: இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம்
நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலகம் எல்லாம்
புரவலன் செங்கோல் வாழ்க.

வேத வேள்விகளில் நெய், சமித்து முதலியவற்றுல் உண்டாக்கப் பெற்ற புகை மேகமாக உருவெடுத்து மழை பெய்து உலகத்தைப் புரக்கிறது என்று அதர்வணவேதம் கூறுகிறது.

இருக்கு வேதத்திலும் மழை பெய்விக்கும் வருண மந்திரங்கள் உள்ளன. யசுர் வேதத்தில் செபங்கள் ஹோமங்கள் கூறப்பெற்றுள்ளன. அதற்கு மாருதமன் என்று பெயர். மனுதர்ம சாஸ்திரத்தில் அக்கினியால் செய்யப்பெறும் ஹோமத்தால் மேகம் உண்டாகி மழை பெய்யும் என்று கூறப்பெற்றுள்ளது.

ஹோமத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் பயன் சொல்லுமிடத்தில் சமித்துக்குப் பயன் மழை எனக் கூறப்பெற்றுள்ளது.

மேகம் பொய்த்தால் நாட்டில் வரட்சி உண்டாகி பசி, பட்டினி, வறுமை, துன்பம், நோய், களவு, கொலை என்பன உண்டாகும். அவற்றுல் ஒழுக்கம், பண்பாடு, அறங்கள், கலைகள், கலாச்சாரம் என்பன கெடும்.

எனவேதான் வேள்விகள், யாகங்கள், அபிடேகங்கள், ஆராதனைகள் என்பனவற்றை நாட்டின் நன்மை கருதிச் செய்தல் வேண்டும் என்று பெரியோர் வகுத்துக்கூறியுள்ளனர். கச்சியப்பசிவாசாரியர் தமது கந்தபுராணத்தில் வாழ்த்தும் வகை இன்பகரமானது.

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்.

உ

# சிந்துவெளி நாகரிகத்தில் சைவப்பண்பாடு

வடக்கில் ஜீலம், ஜீனப், ராவி, பியாஸ், சட்லெஜ் என்னும் ஐந்து கிளைநதிகளும் பாயும் பரந்த பிரதேசம் ஐந்துநீர், பஞ்ச அப்பு என்ருகிப் பஞ்சாப் மாநிலமாயிற்று. அங்கே அருமையான ஆற்ருேரங்களிலே நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகம் நிலவியது. அந்த நயத்தக்க நாகரிகம் கண்டவர்கள் திராவிடர் என்பது முடிந்த முடிபு. அக்காலத்தில் வேறு புலங்களிலிருந்தும் நாடோடிகள் நாட்டுள் புகவில்லை.

அந்த நாகரிக நகரங்களே இன்று வேற்று மொழிப் பெயர்கள் என ஒலிக்கின்றன. மொகஞ்சதரோ, ஹரப்பா முதலியவை நாகரிகத்தில் உச்சநிலை கண்டவை. அங்கே படைபடையாகப் பல நகரங்கள் தோன்றி மண்மூடுண்ட சான்றுகள் உள்ளன. அங்கே அகழ்ந்தெடுக்கப்பெற்ற புதைபொருள்களில் சைவச் சான்று பகர்பவை மிகப்பலவாகும். சிவலிங்கப்பெருமான், அம்மை வடிவில் தாய்க்கடவுள், கூத்தப்பிரான் வடிவம், தட்சிணுமூர்த்தி வடிவம் என்னும் தென்முகக் கடவுள் முதலிய திருவுருவங்கள் உள்ளன. மக்கள், கடவுளைத் திருவுருவங்களில் வழிபட்டனர் எனவே அன்று உருவ வழிபாடு நிகழ்ந்தது. அவர்கள் அருவுருவநிலையையும், பலவாய உருவநிலைகளையும் நன்கறிந்திருந்தனர். ஆண்வடிவும் பெண்வடிவும் அருகருகே காணக்கிடைத்தமையின் அவர்கள் இறைவனைச் சக்தி மானுகவும் சக்தியாகவும் கண்டனர். மான், புலி, மாடு முதலிய மிருகங்கள் நிமிர்ந்து நோக்க ஒரு மனிதவுருவம் இருத்தலில் அவர் பசுக்களுக்குப் பதியாய் இருந்தமையை மக்கள் அறிந்திருந்தனர் என்பது போதரும்.

இன்னும் பத்மாசனத்தில் பெரியவர் ஒருவர் குரு மூர்த்தமாய் இருப்ப, இருபுறமும் மண்டியிட்டு வணங்கும் உருவங்கள், சீடரின் பாவனையில் இருக்

(14ஆம் பக்கம் பார்க்க)

★ உடம்பால் அழிபவர் திடம்பெற ஞானம் தேடமாட்டார் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநெறி விளக்கம்

## 1. திருவைந்தெழுத்து

பஞ்சாக்கரம் எனவும் வழங்கும் திருவைந்தெழுத்து, சைவப் பிரவேசமாய சிவதீட்சை பெற்ற பின் நியமமாக ஓதவேண்டியது. அது என்றும் துணையாய் நிற்கும், நினைப்பவரைக் காத்துநிற்கும், நிறையப் பொருள்தரும், இன்பந்தரும், இயமனை வெல்லும், தீமையை வெல்லும், மேலான தகுதி தரும், முத்தி தரும்.

## 2. திருத்தொண்டர்

வேதங்களாலும் சிவாகமங்களாலும், புராணங்களாலும், இதிகாசங்களாலும், ஸ்மிருதிகளாலும் முழுமுதற் கடவுள், உலகத்துக்குக் கருத்தா என்றெல்லாம் போற்றப்பெறும் சிபபெருமானைப் பக்தி ஞானங்களால் அடைந்து முத்தி கூடினோர்.

## 3. பக்தி நெறி

எவ்வகைப் பற்றும் தம்மை நீங்கத் தம்மோடுடனாய் நிற்கும் முதல்வனிடத்து அன்புகொண்டு, அவனை அடைய வேண்டும் என நிற்றல்.

## 4. அந்தரங்க பக்தி

பக்தி இருவகைப்படும். அவை அந்தரங்க பக்தி, பகிரங்கபக்தி என்பனவாம். அந்தரங்கபக்தியாவது, சிவபிரானைப் பலகாற் சிந்தித்தல், உள்ளங்குளிர்தல், உரோமமுகிழ்த்தல், ஆனந்தக்கண்ணீர் விடல், கண்டம் வியர்த்தல், மொழிதடுமாறல், குரு லிங்க சங்கமங்களைக் காணிற் பேரவாவுறுதல். சங்கமம் அடியார் திருக்கூட்டம்.

## 5. பகிரங்க பக்தி

திருவைந்தெழுத்து ஓதல், துதித்தல், பூசித்தல், திருநந்தவனம் செய்தல், மலர் பறித்தல், திருப்பள்ளித் தாமம் செய்தல், குருபணி செய்தல், அடியார் பணி செய்தல்.

## 6. பல்லியம்

நால்வகை ஓசை. அவை கொட்டுவன, ஊதுவன, இயக்குவன, தட்டுவன.

## 7. பெருமை

கல்வியுடைமை, ஒழுக்கமுடைமை, கொடையுடைமை, புகழுடைமை.

## 8. சீலங்கள்

செபம், தவம், தியானம், விரதம்

## 9. உள்ளப் புனிதம்

அவா, வெகுளி, மயக்கம் இல்லாதிருத்தல்.

## 10. ஞானம்

அன்புகாரணமாக முதல்வனை உள்ளவாறுணரும் உணர்வு. அன்பு தீவிரதரம், தீவிரம், மந்ததரம், மந்தம் என நான்கு தரத்தது. அது சக்தி பதிதற்கேற்ப அவ்வாறமையும். அன்பு முதல்வனின் வேறாகாது நிற்கும் சிவஞானமாகும். அது அநந்நிய பக்தி அன்பே சிவம் எனக் கூறினன் நந்தி.

## 11. சிவயோகியார்க்குக் கூறியவை

கவசம், கண்டிகை, முண்டனம், திருவெண்ணீறு.

## 12. அந்தணர் கோத்திரங்கள்

கௌசிகர், காசிபர், பரத்துவாசர், கௌதமர், அகத்தியர்.

## 13. அரசர்க்குரிய திரு

வெண்கொற்றக்குடை, வெற்றிமுரசு, தேர், யானை, குதிரை.

## 14. அட்டமூர்த்தி

மண், நீர், தீ, காற்று, ஆகாயம், மதி, இரவி இயமானன் [மண்—பிருதிவி, நீர்—அப்பு, தீ—தேயு, காற்று—கால், மதி—சந்திரன், இரவி—சூரியன், இயமானன்— ஆன்மா]

## 15. எரி மூன்று

ஆகவநீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினியம் என்பனவாம், இவை மூன்றும் பரிசுத்தமானவை. ஆகவனீயம் என்பது, நாற்சதுரமாய் வடக்குத் திசையில் அமைக்கும் குண்டத்தில் எழுவது. காருகபத்தியம் என்பது, முச்சதுரமாய் தெற்குத் திசையில் அமையும் குண்டத்தது. தக்கிணாக்கினியம் பிதிர் காரியம் செய்து ஓமம், பலி முதலியவற்றுக்கு வளர்ப்பது.

## 16. மும்மூர்த்திகள்

பழைய முறையில், தாய்க்கடவுள், தந்தைக் கடவுள், குமரக்கடவுள் என்னும் சோமாஸ்கந்த மூர்த்தமாகும். சக உமாஸ்கந்தர் அஃதாவது உமை, கந்தர் சகிதமாய் உள்ளமூர்த்தி.

பிற்காலத்து முறையில் பிரமா, விஷ்ணு, உருத்திரன் என வந்தனர். பிரமா படைத்தல் தொழிலோடும், விஷ்ணு காத்தல் தொழிலோடும் சம்பந்தப் படுத்தப் பெற்றனர். உருத்திரன், ருத்—துக்கம், ரன் ஓட்டுபவன். இடும்பை நோய் ஓட்டும் ருத்ரன் என்பர்.

## 17. தானவர் மூவர்

தாருகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி எனச் சில இடங்களிலும், பரமவிரதன், பரமயோகன், பரமகுணன் எனச்சில இடங்களிலும், சுசீலன், சுதன்மன், சுபுத்தி எனச்சில இடங்களிலும் வருகின்றவர் திரிபுரத்தவர். இவர்களைச் சிவபெருமான் வென்று நல்வழிப்படுத்தினார். இவர்களைத் திருமூலர் முப்புரமாவது மும்மலகாரியம் என்று, ஆணவம், கன்மம், மாயை ஆகும் என்பர்.

## 18. மூவினை

வினை என்பதனை ஊழ் என்றும் அது வலிமை வாய்ந்தது என்றும் கருதுவர். வினைப்போகமே என்று

(13ம் பக்கம் பார்க்க)

★ உள்ளதற்குச் செய் முதல் உண்டு. அவரே சிவபெருமான் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூல் நிலையம்

## நந்தியெம் பெருமான்



பெரும் பக்தரும் பக்குவியுமாய நந்தியெம்பெருமான், இடபமாய்ச் சிவபெருமானின் கொடியில் எழுதப்பெற்றவர். நந்திக்கொடி வலிமையின் அறிகுறி. கொடி என்பது இறைவனுக்கும் மன்னனுக்கும் உரியனவாய பத்து அங்கங்களில் ஒன்று. அவற்றைத் தசாங்கங்கள் என்பர்.

தசாங்கங்களுள் முதலங்கம் கொடி. இதனைக் கொடிபாடி, தேர்பாடி, கொய்தண்டார்மாறன் முடிபாடி, முத்தாரம்பாடி என்றுவரும் வரிசைக்கிரமத்தில் அறியலாம்.

கொடி ஒரு குறியீடு. அந்தக் கொடியைக்கொண்டு இன்றைய அரசியல் வரலாற்றில் ஒரு நாட்டையும் அதன் நிலவியல்பையும், நாகரிகப் போக்கையும், இலக்கியத்தையும், கலைகள் கலாச்சாரம் முதலியனவற்றையும் மனக்கண்முன் வருவித்து அறிந்துகொள்ளலாம்.

இவ்வாறே இடபவான் கொடியைக்கொண்டு சிவபெருமானின் பரத்துவம், வியாபகம், திருவிளையாடல், திருவருட்டிறன் முதலியவற்றை நன்கறிந்து கொள்ளலாம்.

திருக்கோயில்களில் துவஜ ஆரோகணம் என்னும் கொடியேற்ற விழாவின்போது இந்தத் தத்துவ நுட்பங்களை எல்லாம் கண்டுகொள்ளலாம்.

இனித் திருக்கோயிலில் உள்ள பலவகைத் தீபங்களுள் விருஷப தீபம் என்பது நந்தி உருவத்தோடு பொருந்தியதொன்றாகும்.

---

சாகை....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமான் திருவடியில் சேர்ப்பித்தான். ஈசுரார்ப்பண முறையை முறையாகக் கூறுவது பிராமணம். எனவேதான் மந்திரங்களும் பிராமணங்களும் கர்மகாண்டம் எனப் பெயர் பெற்றன. கர்மம் கிரியைகளை, சுயதர்மங்களை, கடமைகளைச் செய்யும் வகைகளைக் கூறும்.

அப்பால் உள்ளது உபநிஷத். அதை உபநிடதம் என வழங்குவர். அவற்றை ஔவையார் திருநான்மறைமுடிவு என்று அருமையாகக் கூறுவர். அது ஞான காண்டம் எனப்பெயர் பெற்றது.

உ

## சிவாசாரியர்கள்

சிவாசாரியசுவாமிகள் என மிகுந்த மரியாதையோடு பிற்காலச் சோழ மன்னர்கள், பேரரசர்கள் போற்றித் தீட்சையாதியன பெற்று, ஆஸ்தான குருவாகக்கொண்ட பெரியவர்கள் பலர். பழைய சிவாசாரியர்களின் ஞானபரம்பரையில் வந்தவராதல் வேண்டும்.

பழைய சிவாசாரிய சுவாமிகளே ஆகமங்களின் வழியில் பத்ததிகள் செய்தவர்கள். அந்தப்பத்ததிகளின் வழியிலேதான் இன்றைய குருக்கள்மார் திருக்கோயிற் கிரியைகள் செய்கிறார்கள். ஆகமங்கள் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் போனவை சைவர்களுக்குத் தவக்குறைவாய்விட்டது. நிற்க.

பத்ததிகள் செய்தருளிய பக்குவான்மாக்கள் திருநாமங்கள் இன்று வழங்கும் வகையில் உக்கிரஜோதி, சத்தியஜோதி, ராமகண்டர், ஸ்ரீகண்டர், நாராயணகண்டர், வீபூதிகண்டர், வித்தியாகண்டர், நீலகண்டர், சோமசம்பு, ஈசானசம்பு, இருதயசிவன், பிரம்மசம்பு, வைராக்கிய சிவன், ஞானசம்பு, திரிலோசனசிவன், வருணசிவன், ஈசுவரசிவன், அகோரசிவன் என்பவராவர். இவர்களுடைய திருநாமங்களுக்கு முன்னும் பின்னும் மரியாதையாக மரபுவழி அடைமொழிகள் அமைத்து வழங்குதல் ஆசாரவழக்கு.

---

சிந்துவெளி.......

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்கள். அன்றே அங்கே குருபீடபாவனை நிலவியது என்பதற்குப் போதிய சான்று கிடைத்துள்ளது. இன்னும் நாசி நுனியை நோக்கியவாறு பெரியவர் இருக்கும் நிலை யோகாசனமாகும். அக்காலத்தவர் வழிபாட்டோடு யோகசாதனையும் செய்தவர் என்பது உறுதியாய் உள்ளது. ஆடல்வல்ல கூத்தப்பிரானின் சிலையொன்று உருக்குலைந்து கிடக்கின்றதெனக் கண்டவர், நடராசதத்துவத்தில் பஞ்சகிருத்தியத்தையும் அறிந்தவராவர்.

இன்றைய மிகப்பெரிய கோயில்களிலும் பார்க்கப் பெரிய கோயில் ஒன்று பாரிய தூண்கள் பலவும் முறிந்து கிடப்பப் 20,000 சதுர அடிப்பரப்பு நிலத்தைக்கொண்டுள்ளது. இது பல்லாயிரவர் இருந்தும் நின்றும் வழிபாடு செய்த இடமாகலாம் எனக் கருதக் கிடக்கிறது. இன்றைய தென்னாட்டுக் கோயில்களின் மதில்களில் பன் நூற்றுக்கணக்கான நந்திகள் இருப்பதை யொப்ப அன்று அங்கேயும் நூற்றுக்கணக்கான நந்திகள் இருந்தன என்பதற்கு உடைவுகள் வெளிப்படையாகக் கிடக்கின்றன.

இவ்வாறு சிவலிங்கங்களும் நந்திகளும் உடைபட்டுப் பரந்து கிடக்கும் பாரிய இடத்தில் சைவம் நிலவியது என்பது வெளிப்படை. இவையாவும் ஆரியர் என்னும் மக்கட்கூட்டத்தவர் இந்தியாவுள் காலடி எடுத்து வைப்பதன் முன்னரே உண்டாகி வழக்கில் வழிபாட்டில் நிலைபெற்றிருந்தன என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

---

**★ குடம் இருப்பதால், குயவன் ஒருவன் இருக்கிறான் ★**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆச்சாரியர்கள்

ஆத்மானுபவம் முதிர்ந்து தெய்வானுக்கிரகம் பெற்ற ஆச்சாரியர்கள், தாம்பெற்ற திருவருட் பிரகாசத்தினுல் குன்றின்மேலிட்ட தீபங்கள் போலப் பிரகாசிப்ப, ஆத்மானுபவம் பெறுவதற்கு முந்தும் ஆன்மகோடிகள் ஆச்சாரியர்களை நோக்கிப் போகின்ருர்கள்.

பற்றுக்களைவிட்ட பக்தர்கள் பறவைகள் போலப் பறந்து செல்லும் வேளையில் இல்லறத்தில் உள்ளவர்கள் தாமும் அருட்தாகமுற்று எறும்புகள் போல ஊர்ந்து போகின்றனர். ஆன்ம ஈடேற்றம் எல்லோருக்கும் உரிமையானது. எல்லோருக்கும் முத்தி உண்டு. பிறவிப்பிணிதீர்க்க மருந்துதவும் மாதவத்தினராய ஆச்சாரியர்கள், தங்கள் முத்திரை பொறித்த தத்துவ உபதேசங்களை உள்ளங் கொள்ளும்வகையில் விட்டுச் சென்றுள்ளார்கள். நாட்டமுற்றவர்கள் தங்கள் உளப் பாங்கிற்கமைய உபதேசங்களை உட்கொண்டு உளந் தேறி உயர்ந்து உய்தியடைந்துள்ளார்கள்.

உடற்பிணி நீக்கும் வைத்திய நிபுணர்களைப்போல உயிர்ப்பிணி நீக்க வல்லவர்களாயிருந்தவர்கள் ஆச்சாரியப் பெருமக்களான அதிமனிதர்கள். அவர்கள் யாவரும் உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை ஆகிய மூலங்களைக் கொண்டே தமது முறைகளைத் தயாரித்துள்ளார்கள் என்பது தெளிவு.

இந்தவகையில் சங்கராசாரியர் எட்டாம் நூற்ருண்டில் அத்துவைதம் என்னும் வழியையும், இராமானுசாரியர் பதினொராம் நூற்ருண்டில்விசிஷ்டாத்துவைதம் என்னும் வழியையும், மத்துவாசாரியர் பதின்மூன்ரும் நூற்ருண்டில் துவைதம் என்னும் வழியையும் வல்லபாசாரியர் பதினைந்தாம் நூற்ருண்டில் சுத்தாத்துவைதம் என்னும் வழியையும் தயாரித்துள்ளார்கள்.

இங்ஙனமாக இவர்கள் தயாரித்த வழிகளை உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய முப்பெருஞானக் களஞ்சியங்கள் என்னும் பிரஸ்தானத்திரயங்களுக்குத் தாம்தாம் எழுதிய பேருரைகள் என்னும் பாடியங்கள் வாயிலாகவே விளக்கியுள்ளார்கள்.

இந்தவழிகள் இவர்கள் தோன்றுவதற்கு முன்பே இந்தியாவில் என்றும் அழியாத இயல்பிலமைந்த சனுதனமாக நிலவிவந்தவையாகும். அவற்றுக்கு இவர்கள் விளக்கங்கூறிய அமைவே இவர்களுக்குப் பெருமையும் பேரும் தந்தன என்ப. இவர்கள் உட்கொண்ட ஊற்றுநீர் ஒன்ருகவே இருந்தன.

ஆச்சாரியர்கள் யாவரும் பெரும் பக்த சிரோமணிகளாவர். இவர்கள் தாம்தாம் கண்ட பேருரைகளை விட ஏராளமான பக்தி நூல்களைத் தர்க்கரீதியில் அமைத்துள்ளனர்.

பதினொராம் நூற்ருண்டின் ஆரம்ப காலத்திலேயே பக்திமார்க்கம் பெருமளவில் பரவிப் பரந்து நிலவியது. யமுனுசாரியர் என்னும் பெரியார் பிற்காலச் சோழப் பெருவேந்தர்கள் மத்தியில் பெரும் புகழ்பெற்றிருந்தார்.

இறைவனிடம் பூரணமாகச் சரணடைதல் என்னும் பிரபக்தி மார்க்கம், அஃதாவது. "என்னுல் இனி ஒன்றும் இயலாது, எல்லாம் உன்செயலே" எனத் தன்னை முற்ருக முதல்வனிடம் ஒப்படைத்தல் என்பதாகும்.

யமுனுசாரியர் கொண்ட கோட்பாட்டையே இராமனுஜர் பிரசாரஞ் செய்து நிலைநாட்ட முயன்ருர். ஆச்சாரியர்கள் பக்திமார்க்கத்தில் வெகுவாக ஈடுபட்டுத் தலங்கள்தோறும் சென்று பிரசாரவேலையில் வினுவிடைமூலம் பக்திமுறையைப் பரப்பி வந்தார்கள். அவர்களால் புராண சம்பிரதாயங்கள் மறுமலர்ச்சியடைந்தன.

இந்தவகையில் இந்துநாகரிகத்தில் அத்வைதம். விசிஷ்டாத்துவைதம், துவைதம், சுத்தாத்வைதம், பேதாபேதம் முதலாய கோட்பாடுகள் பெருகியுள்ளன. இவ்வாறு பரவிய கோட்பாடுகளிடையில் சைவத்துறையில் எழுந்த மெய்கண்டாரின் புனித அத்வைதம் ஒன்றுண்டு. அது நீலகண்ட சிவாசாரியர் கண்ட சிவாத்துவிதத்தோடு பெருமளவில் ஒத்துப் போவது, சிவமயமானது.

# சித்தர்வாழ்வு சிவன்வாழ்வு

முந்திய இதழில் சித்தர் பற்றி அறிமுகம் ஓரளவுண்டு. சித்தர்கள் சிலர் சீவசமாதியிலும் சிவசமாதிலும் திருக்கோயில்களின் அண்மையில் வாழ்ந்துகொண்டே மக்களுக்கு வாழ்வளிக்கிருர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிதம்பரம் | ... | திருமூலர் |
| 2. | திருப்பதி | ... | கொங்கணர் |
| 3. | பழநி | — | போகர் |
| 4. | சீகாழி | ... | சட்டைமுனி |
| 5. | திருப்பரங்குன்றம் | ... | மச்சமுனி |
| 6. | தஞ்சைப்பெருங்கோயில் | ... | கருவூரார் |
| 7. | அழகர்மலை | ... | இராமதேவர் |
| 8. | திருவண்ணுமலை | ... | இடைக்காடர் |
| 9. | திருவாரூர் | ... | கமலமுனி |
| 10. | திருக்கடவூர் | ... | பாம்பாட்டி |
| 11. | நாங்கணுச்சேரி | ... | புண்ணுக்கர் |
| 12. | பொய்யூர் | ... | கோரக்கர் |
| 13. | நாகபட்டினம் | ... | அழுகண்ணி |
| 14. | மாயவரம் | ... | குதம்பை |
| 15. | மதுரை | ... | சுந்தரானந்தர் |
| 16. | காஞ்சிபுரம் | ... | கடுவெளி |
| 17. | காசி | ... | நந்திதேவர் |
| 18. | எட்டிக்குடி | ... | வான்மீகி |
| 19. | திருவிடைமருதூர் | ... | நாரதர் |
| 20. | ராமேஸ்வரம் | ... | பதஞ்சலி |
| 21. | உருத்திரகிரி | ... | காசிபர் |
| 22. | திருவாவடுதுறை | ... | விசுவாமித்திரர் |
| 23. | வைத்தீஸ்வரன் கோயில் | ... | தன்வந்திரி |
| 24. | கும்பகோணம் | ... | கும்பமுனி |

★ செம்பொருள் என்றும் மாறுபடாமல் இருப்பது ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## இந்துநாகரிகத்தில் வடமொழிப்பதங்கள்

1. அட்சரம் — எழுத்து
2. அஷ்டகம் — எட்டாலானது
3. அட்டசித்தி — எண்வகைப்பேறு
4. அஷ்டபந்தனம் — எண்புறக்கட்டு
5. அட்டமூர்த்தம் — எண்வகை வடிவம்
6. அட்டமங்கலம் — எண்வகை மங்கலம்
7. அட்டாங்கம் — எண்வகை உறுப்புகள்
8. அட்டாங்கயோகம் — எண்வகைத் தவநிலை
9. அட்டாவதானம் — எண்பொருள் நோக்கு
10. அண்டகோசம் — முட்டைவடிவான உலகம்
11. அண்டகோளம் — உலக உருண்டை
12. அண்டஜம் — முட்டையிற்பிறப்பன
13. அண்டசன் — நான்முகன்
14. அண்டர் — வானோர்
15. அண்டன் — சிவன்
16. அதலம் — கீழுலகு
17. அதர்மம் — தீவினை — மறம்
18. அதிருக்குமம் — மிகு நுண்மை
19. அதிட்டானம் — நிலைக்களம்
20. அதி தீவிரம் — மிகு விரைவு
21. அதிதேவதை — குலதெய்வம்
22. அதிபாவம் — பெருங்குற்றம்
23. அதீதம் — எட்டாதது
24. அதீதன் — எட்டாத கடவுள்
25. அதோமுகம் — கீழ்முகம்
26. அர்த்தசாமம் — நள்ளிரவு
27. அர்த்தநாரீஸ்வரன் — உமையொருபாகன்
28. அஸ்தம் — கை
29. அர்த்தம் — பொருள்
30. அஸ்தி — எலும்பு
31. அத்தியந்தம் — மிகுதி
32. அத்தியயனம் — மறையோதல்
33. அத்தியாத்மா — உயிர்
34. அத்தியாபனம் — மறை ஓதுவித்தல்
35. அத்தியாயம் — நூற்பிரிவு
36. அஸ்திரம் — அம்பு
37. அத்துவயம் — இரண்டன்மை
38. அத்துவா — வழி
39. அத்துவிதம் — இரண்டற்றது
40. அநந்த கீர்த்தி — பெரும்புகழ்
41. அநந்தசக்தி — முடிவிலாற்றல்
42. அநந்தசயனம் — பாம்புப்படுக்கை
43. அநந்த சுகம் — வரம்பிலின்பம்
44. அநந்தசொரூபி — அளவில் வடிவினன்
45. அநந்தானந்தம் — பேரின்பம்
46. அநந்நியம் — வேறன்மை
47. அநவரதம் — எப்போதும்
48. அநாகதம் — அறியப்படாதது
49. அநாசாரம் — ஒழுக்கமின்மை
50. அநாதி — தோற்றமின்மை

## சைவநெறி...

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சைவர்கள் கூறியதைப் பௌத்தர், "வினையின் வந்தது வினைக்கு வினையாவது புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது" என்பது மணிமேகலை.

வினை மனம் வாக்கு காயம் என்னும் மூன்றிலும் ஈட்டப்படும்போது ஆகாமியம் எனப்படும் அது மாயையிற் கிடந்து சனகம், தாரகம் போக்கியம் என மூவகையாகப் பயன்படும்போது, அபூருவம் சஞ்சிதம் புண்ணியபாவம் எனப்படும். அதுபயன்படுங்காலத்து ஆதிதைவிகம் ஆதியான்மிகம் ஆதிபௌதிகம் எனப் பெயர்கள் பெற்று அனுபவிக்கும்போது பிராரத்தம் எனப் பெயர்பெறும். வினைபோகங்களைப் பயப்பிக்கும் வினையை ஊழ் எனக் கருதிய சங்ககாலப்புலவர், நீர் வழிப்படும் புணைபோல ஆருயிர் ஊழ்வழிப்படும் என்றார் திருவள்ளுவர் ஊழ் என்பதை நன்றாக விளக்கியுள்ளார்

### 19. அற்புதக் கூத்து

தாண்டவம் புரியவல்ல தம்பிரானாய சிவபெருமான் நடராசமூர்த்தத்தில் ஆடலேபுரியவர். அவர் அற்புதக்கூத்தர். அந்த அற்புதக் கூத்தைத் தரிசிக்கும் போது, அன்புடையார்களுக்குத் தற்போதம் ஒழித்து அதியற்புத ஆனந்தத்தை விளைவிக்கும் இதனைத் திருமூலர் நன்குணர்ந்து நயந்து விளக்கியுள்ளார்

"விம்மும் வெருவும் விழும்எழும் மெய்சோரும்
தம்மையும் தாமறியார்கள் சதுர் கெடும்
செம்மை சிறந்த திருஅம்பலக் கூத்துள்
அம்மலர்ப் பொற்பாத அன்பு வைப்பார்கட்கே"

இன்னும் தளர்ச்சி நீங்கும். சிந்தை ஒடுங்கும், புத்தி செம்மையாய் இருக்கும்,, ஆசை அறும், ஆனந்தம் பெருகும், மேலும் சிவநடனம் காண ஆசை உண்டாகும் என்பர்.

### 20. பசுபதி

சிவபெருமான் உயிர்களாய பசுக்களுக்குத் தலைவனாய பதியாகலின் பசுபதி எனப் பெயர் பெற்றார் என்பதோடு, உமாதேவியார் பசுவுருக்கொண்டு பூசித்தமை பசுபதி எனத் திருநாமம் பெற்றார் எனவும் கருதுவர்.

### 21. சைவநெறி

அனாதியே தற்சுதந்தரராய், ஆன்மாக்களுக்குத் தலைவராய், பரமபதியாய் உள்ள சிவபெருமான் ஆன்மாக்களை உடமைப்பொருளாய் உள்ளவர். அவருடைய திருவருளின்றி ஆன்மாக்களைப் பந்தித்த பாசம் நீங்கமாட்டாது. இதை உணர்ந்து, அருள்வழி நின்று, அவரை அநுதினமும் வழிபடுதல் சைவநெறி.

### உண்ணும் முறை

இடையில் எழுந்து சென்று மீண்டுவந்து உண்ணலாகாது. எச்சிக்கையோடு எவரையும் சென்று பார்த்தலாகாது. எச்சிலை எவர்க்கும் இடலாகாது. பெருந்தீனியினால் நோயுண்டாகும், ஆயுள் குறையும்.

★ ஏகோருத்ராய என்பது ஒருவன் என்னும் ஒருவனாய சிவன் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளில் இந்துநாகரிகம்



பரதகண்டம் என்னும் இந்தியாவைப் பரந்த அமைப்பில் ஆராயும்போது அது அகன்ற பாரதம், தீவாந்தரபாரதம் எனக்கருதும் வகையில் பரந்துபட்ட பெரு நிலப்பரப்பாகும்.

தெற்கிலும் தென்கிழக்கிலும் அமைந்த ஆசிய நாடுகள் எங்கும் ஒருகாலத்தில் இந்துநாகரிகமும் இந்துப் பண்பாடும் பரவியிருந்தமையை இன்றைய மேற்கு நாட்டவர் ஆராய்ந்து கண்டு வியக்கிறார்கள்.

அவர்களின் வியப்பில் பெருவியப்பு தமிழும் தமிழ் நாகரிகமும் அங்கெல்லாம் பரந்து நிலவியவையுமாம். தென்னாசிய தென்கிழக்காசிய நாடுகளில் இந்துநாகரிகம் என்பதைப் பல கோணங்களில் ஆராய்ந்துள்ளார்கள்.

ஆராய்ச்சியாளர் அத்தனைபேரின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து நாம் போவோமேயானால் நாம் எழுதவேண்டியவை பெரிய வரலாறாகவே முடியலாம். அவற்றைச் சுருக்கமாகவும் அறிதல் இயலாது.

இங்கொன்று அங்கொன்றாகச் சில சுவடுகளைக் குறித்து ஓரளவுக்கு இந்த வரலாற்றுப் பகுதியை, அலகை நிறைவுசெய்து கொள்ளலாம்.

## தென்கிழக்காசியா

இன்றைய தென்கிழக்காசிய வலயத்தில் பத்து நாடுகள் உள்ளன. அவை அண்மையில் சுதந்திரம் பெற்று மேற்கு வல்லரசுகளின் சுரண்டலில் இருந்து சுபிட்சமடைந்து வருகின்றன.

## இந்தோனேசியா

தமிழ் நாட்டோடும் தமிழ் நாகரிகத்தோடும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த பழைய நாடு இந்தோனேசியா. ஏறக்குறைய 7,35000 சதுரமைல் பரப்புள்ள இந்நாட்டில் இன்று இந்தோனேசியா மலாய், ஜாவா மொழிகள் வழங்குகின்றன.

இந்தோனேசியாவில் பழைய இந்துசமயமும் பின்னர் புகுந்த இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்களும், ஆதிகாலச் சம்பிரதாய அநுட்டான சமயமும் நிலவுகின்றன.

ஆயிரக்கணக்கான தீவுகளைக் கொண்ட இந்நாடு இடைக்காலத்தில் ஒல்லாந்தர் ஆட்சியிலகப்பட்டு 1950 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றது.

இந்தோனேசியாவில் ஜாவா, பாலி, போர்ணியோ, செலிபிஸ், நியூசினியா தீவுகள் அடங்கியுள்ளன.

பர்மா, தாய்லாந்து (சீயம்) கம்போடியா, மலாயா, சுமத்திரா, யாவா, போர்ணியோ, பாலி, செலிபிஸ், பிலிப்பீன்ஸ் முதலிய பல பிரதேசமெங்கும் பண்டொருக்கால் இந்துப்பண்பாடு கொடிகட்டிப் பறந்தது.

அங்கெல்லாம் தமிழ்க் கல்வெட்டுக்கள் பல்லவ சோழ மன்னர்களின் செல்வாக்கைக் கூறுகின்றன. சிவன், விஷ்ணு முதலான இந்துமதக் கடவுள் மூர்த்தங்கள் கோயில் கொண்டுள்ளன. சிற்பக்கலைகள் உருக்குலையாமல் அடர்ந்த காடுகளில் திருக்கோயில்கள் புழுதிமண்டிக் கிடக்கின்றன. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மூத்த குடியினராய தமிழர் சீன தேசத்தையும் நன்கறிந்திருந்தனர். தமிழ் நாடு, தெலுங்குதேசம் என்னும் இன்றைய பிரிவுகள் அமையுமுன்னரே தென்னாடு என்னும் பொன்னாட்டு மக்கள் புவியளந்த வணிகராயிருந்தனர். திரைகடல் ஓடித்திரவியம் தேடிய பழைய வர்த்தகர்கள் தமிழரே தான்.

அகன்ற இந்தியா, அங்கோர் போகும்வழி என்றெல்லாம் குவாறிச் வேல்ஸ் முதலானோர் எழுதிய பின்னரே எம்மவர் கண்களைத்துடைத்து கருத்தூன்றி வாசிக்கத்தொடங்கினார்கள். பிரதமர் ஜவகர்லால் நேரு அருமையாக எழுதியுள்ளார். தென்னிந்தியரின் செல்வாக்கு என்று நீலகண்ட சாஸ்திரியார் எழுதினார். வணக்கத்துக்குரிய ஹீராஸ் போதகரும் எழுதினார். இன்று நூற்றுக்கணக்கானோர் எழுதிவிட்டார்கள். இன்னும் இன்னும் அறியவேண்டியவை மண்மூடிக் கிடக்கின்றனவாம், அணுகியாராயாமல் அமைந்துள்ளனவாம். இன்னும் சில ஆண்டுகளில் அவற்றையெல்லாம் நாம் வீட்டிலிருந்தவாறே ஒளிபரப்பில் கண்டு கொள்ளலாம்.

(19-ம் பக்கம் பார்க்க)

★ சிவனை நினைத்தல், ஒன்று காதலித்து உள்ளம் ஓங்கிட ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அவள்

சங்கு, சக்கரம், கத்தி, கேடயம், வில், அம்பு, பாசம், மணி முதலிய வற்றை ஆபரணங்கள் போலத் தரித்த அவள் மகிஷாசுரமர்த்தனி.

இயற்கை அன்னையாய், உலகுக்கு அபயம் கொடுத் தருளிய கோலத்தில், போருக்கும் தயாராகி, துஷ்ட நிக்கிரகஞ் செய்து, சிஷ்ட பரிபாலனமும் செய்பவள் துர்க்கை.

அன்னை பயங்கரி, அபயசுந்தரி, அவள் விஷ்ணு வின் அம்சமும் உள்ளவளாய்ச் சங்குசக்கரமும் தரித்த வள். அன்றி கத்தி, கேடயம், வில், அம்பும் உடைய வள். அவள் ஞாலம் நடுங்கக் கர்ச்சிக்கும் சிங்கத்தை வாகனமாகக்கொண்டவள்.

அவளைப் பணிமின்கள் என்று பெரிய பக்தர்கள் பாடியுள்ளார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கானத்து வேடுவர்கள் அவளைக் கொற்றவை முதலாய திருநாமங்கள் கூறிப் படையல்கள் படைத்து, அன்புருவாகி நின்று கூத்தாடி மகிழ்ந்து பரவினர்.

முற்காலத்திலே துர்க்கை பூசை என்பது பிரதிமை கள், திருவுருவங்களின்றிக் கும்பத்தில் ஆவாகனஞ் செய்து மந்திரங்கள், பாடல்கள் பாடி ஆடி மகிழ்ந்து, ஈஸ்வர ஆதிபத்தியத்திற்குச் சக்தியே மூலகாரணம் என வணங்கியவர்களும் இருந்தார்கள். அவர்கள் வணங்கிய திருநாமங்களில் மகாமாயை, மகிஷாசுர மர்த்தினி, காளி, சாமுண்டி, சண்டிகாதேவி, சாமளா தேவி, சிவதூதி முதலியன ஒரு பகுதியாகும்.

இன்னும் சிலர் பிராமி, வைணவி, மாகேசுவரி, கௌமாரி, வராகி, இந்திரை, நாரசிம்மி என்னும் எழுவரை சப்தமாதர் என வணங்கினர். பராசக்தியை கோரவடிவில் காளியாயும், போர் முகத்தில் துர்க்கை யாயும், ஆன்மாக்களுக்குப் போகபோக்கியங்களைக் கொடுக்கும்போது பவானி என்றும் நின்றருள்புரிபவள் என்பர்.

கோவலனும் கண்ணகியும் சோழநாட்டைவிட்டுப் பாண்டிநாட்டுக்குச் சென்றவழியில், வேடர்கள் எடுத்த விழாவொன்றைக் கண்டதாக இளங்கோவடி கள் அருளுகின்றார். வேடர்கள் கொற்றவையை வழி பட்டு ஆடியும் பாடியும் மகிழ்ந்த செய்தி சிலப்பதி காரத்தில் வருகிறது. வேடர் குடியிருப்பில் கொற் றவைக்குக் கோயிலிருந்தது. அங்கே எழுந்தருளியிருந்த கொற்றவையைக் குறிக்கும்போது பாடல் அருமை யாக அமைகிறது.

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசையே நின்றாயால்
சங்கமும் சக்கரமும் தாமரைக்கை யேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்."

கொற்றவை வழிபாட்டில் பூசைசெய்தவள் பெண் பூசாரி என்றும் அவளைச் சாலினி என்று வழங்கினர் என்றும் தெரிகிறது. அவளே வேடர்களை ஊக்கப் படுத்திக் கொற்றவை விழாவுக்கு ஒழுங்கு செய்வித்து வந்தாள்.

வேடர் கிளி, மயில், கானக்கோழி, பந்து, கழங்கு முதலியவற்றைக் காணிக்கையாகப் படைத்து, வண் ணம், சுண்ணம், சந்தனம் முதலியனவும் வைத்து, அவரை, துவரை, எள்ளுப்பாகு, நிணச்சோறு ஏந்தி; பல்வேறு தரப்பட்ட பறைகள், குழல்கள், சங்குகள், மணிகள் முதலியவற்றை ஒலித்தனர். இளம் பெண் கள் வண்ணம், சுண்ணம், சந்தனம், படையல், பூ, புகை முதலியவற்றை ஏந்திநின்றனர். வேடுவர் உணர்ச்சி வசப்பட்டுக் கொற்றவையிடம் வரம் கேட் டுப் பாடினர். பகைவர்களின் பசுநிரைகளைத் தாம் கவர்ந்துவரவேண்டும் எனப் பாடினர்.

"அழகிய முடியையுடைய தேவர்கள் தங்கள் வேந்த னோடு வந்து பணியும் நீலமணிபோலும் உருவத்தை உடையாய்! நின் மலர்போன்ற திருவடிகளை நாம் தொழுதோம். நாங்கள் பகைவர்கள் நிரைகளைக் கவர்வதற்கு விலையாக இவற்றைக் கொள்ளுவாயாக" என்றெல்லாம் பாடுவர். அவர்களின் மூன்னிலைப் பர வல் பக்தியின் ஆழத்தைக் காட்டுகிறது.

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்.
வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்
அரியரன்பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்.
சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறையேத்த வேநிற்பாய்.

தேவியருள் பெற்றாற் போலப் பூரிப்புடன் சென்ற வேடர் பகைப்புலத்துச் சூறையாடிவந்தவற்றையெல் லாம் தாமே பயன்செய்யாது; தமக்கு உதவியாக வந்தவர்களுக்கும் முன்னரே தமக்கு வில், அம்பு, வாள், வேல் முதலியவை செய்து கொடுத்தவர்களுக்கும், பாட்டுப் பாடிய பாணர்களுக்கும், நிமித்தம் கூறிய சோதிடர்களுக்கும், ஊக்கந்தந்த கள் விற்ற பெண் களுக்கும் தாராளமாகக் கொடுத்துத் தாமும் கொண் டனர். இது வேடுவரிடத்துக்கண்ட மிகப்பழைய இந்துநாகரிகம்.

★ வியாழபகவான் இந்திரனுக்குப் போதித்தது லோகாயதம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மகான் அப்பைய தீட்சிதர்

## (1520 - 1593)

"உலகத்துக்கு மெய்யறிவு வழங்கிய பெரியவர்" என்று நாசிம்ம ஆச்சிரமம் கொண்டாடிய பேரறிஞர், பெருஞானி, மகான் அப்பையதீட்சிதர். தெலுங்கு தேசமாய் இன்று உருவாகியுள்ள மாநிலத்திலே வட ஆர்க்காட்டிலே வேலூருக்கு அப்பால் திரிவிரிஞ்சிபுரம் என்னும் ஊரிலே இரங்கராஜ தீட்சிதர் என்பாரின் மைந்தனாக 1520ஆம் ஆண்டளவில் தோன்றியவர் அப்பையதீட்சிதர். தந்தையார் இரங்கராஜர் சர்வ வேதா எனப் பெரும் புகழ் பெற்றவர். அவர் வாழ்ந்த இடத்தை அடையபலம் என்றும் சிலர் கருதுகிறார்கள்.

அப்பைய தீட்சிதர் இளமையில் சிவதீட்சை பெற்று வித்தியாரம்பம் செய்யப்பெற்றவர். தெலுங்கர் மத்தியில் வித்தியாரம்பத்தின்போது சிவமூல மந்திரத்தைக் கூறுதல் வழக்கம். சிவமூல மந்திரஞ் சொல்வதற்குச் சிவதீட்சை அவசியமாகவே, அவர்கள் ஐந்தாம் வயதுக்குள் சிவதீட்சை பெற்றுக் கொள்வர். தெலுங்கர் தங்கள் மனைவியரை "வசி" என அழைத்தல் வழக்கம். வசி வசி என அழைக்கும் போது "சிவசிவ" என ஒலிப்பதை அவர்கள் பெரும் பேறுகக் கருதிப் பெருமைப்பட்டனர்.

மகான் அப்பைய தீட்சிதர் சிவபக்தியிற் சிறந்தவர். வியாசபகவான் செய்த பிரமசூத்திரத்திற்கு நீலகண்ட சிவாசாரியர் என்றோ எப்பவோ சிவாத்துவித பாடியம் எழுதியவர் அந்தப்பாடியம் என்னும் விருத்தியுரையைவெகுவாக இலகுப்படுத்தி, விளக்கி, சிவார்க்கமணி தீபிகை என்னும் சிறந்த வியாக்கியான நூலை எழுதியவர் அப்பைய தீட்சிதர். இன்னும் வியாச பாரதத்தில் வருகின்ற சிவபரத்துவ சுலோகங்களை விளக்கிப் பரப்பியவர்.

அவருடைய சிவபக்தியையும் சிவப்பணியையும் கண்டு வியந்து வணங்கிய வேலூர் சின்னப்பொம்ம நாயக்கன் என்னும் மன்னன், அவரைச் சிவனெனவே கருதி, அவருக்குக் கனகாபிடேகம் செய்து சிறப்பித்தான். மகான் அப்பைய தீட்சிதர் அந்தப் பொற்குவியலைக்கொண்டு, அடையபலம் ஸ்ரீகாலகண்டேசுவரர் கோயிலையும், வரத ராஜசுவாமி கோயிலையும் நிர்மாணித்தார் என்பர்.

சிவனை ஆராதிப்பவர் சிவனாகிவிடுவர். 'யத்பாவ தத் பவதி' என்பதும் அதுவே. நீ எதை நினைப்பற நினைக்கின்றயோ, நீ அதுவேயாகிவிடுகின்றாய். தீட்சிதா தாம் என்றும் சிவசிந்தையுடையவர் தாமோ என்பதை அறிவதற்குத் தம்மைத் தாமே ஒரு பரிசோதனைத்துக்கு ஆளாக்கிக்கொண்டார். சித்தப்பிரமையை உண்டாக்க வல்ல ஊமத்தங்காயை அரைத்துப் பருகத் திட்டமிட்டார்.

மாணக்கர்களிடம் தாம் சித்தப்பிரமைகொண்டு பேசுவதையும் பாடுவதையும் அட்சரம் தவறாமல் எழுதிவைக்கும் வண்ணம் வேண்டிக்கொண்டார்.

சித்தப் பிரமையிலும் சிவசிந்தனையுடையவராயே அவர் ஐம்பது பாடல் பாடினார்கள். சித்தப்பிரமையை முறிப்பதற்கு முன்கூட்டியே அவர் சொல்லிவைத்த மருந்தைச் சீடர்கள் கொடுப்ப அவர் நல்லுணர்வு பெற்றார். அவர்பாடிய பாடல்கள் சிவபரத்துவமாகவே அருமையாகவிருந்தன. எளிய நடையிலமைந்த அதுவே "உன்மத்த பஞ்சாசத்" என்னும் உயரிய ஆன்மார்ப்பணத் துதியாகும்.

வேதசிவாகமங்களில் அசையாத நம்பிக்கையுள்ளவராகிய தீட்சிதர், வேதங்கள் விதித்தவண்ணம் பௌண்டரிகம், ஸோமம், வாஜபேயம் முதலாய யாகங்களைச் செய்து, யாகாதிபதி என்னும் எஜமானனாயும் இருந்தார். அவர் இல்லறமேற்று நல்லறங்கள் செய்தவாறே நூற்று நான்கு நூல்களையும் இயற்றினார். அவை பெரும்பாலும் சிவபரத்துவமானவை.

தீட்சிதருக்கு நாளிலும் பொழுதிலும் நல்ல பேரும் புகழும் பரவுவதைக் கண்ட தாதாசாரியர் என்னும் கல்விமான் உட்பகைகொண்டு தீட்சிதரை ஒழித்துவிடுவதற்குத் திட்டமிட்டுக் கொடிய நஞ்சினை எடுத்துக்கொண்டார். ஒருநாள் அவர் தீட்சிதரிடம் "உங்கள் சிவபெருமான் ஆலகால விடத்தை உண்டவராமே. நீரும் அவருடைய பக்தராயின் இந்த நஞ்சை உண்பீரா?" என்று கேட்டார். பெயக்கண்டும் நஞ்சுண்பவர் என்னும் திருக்குறளை நினைவுகொண்ட தீட்சிதர், சிவனை முன்னிட்டு நஞ்சினை வாங்கி அருந்தினார். அவருக்கு நஞ்சும் அமுதானமை கண்டு தாதாசாரியர் வெகுவாக அஞ்சினார்.

ஒரு சமயம் நாடாளும் மன்னன் தீட்சிதருக்கும் தாதாசாரியருக்கும் விலையுயர்ந்த பட்டாடைகளை வழங்கிச் சிறப்பித்தான். தாதாசாரியர் தமது பரிசு ஆடையைப் பகட்டாக அணிந்து பவனிபோனார். தீட்சிதர் தமது பட்டாடையை ஓமகுண்டத்தில் ஆகுதிசெய்து சிவார்ப்பணமாக்கினார்.

ஓமகுண்டம் சிவார்ப்பணம் ஆகுதி ஆகியவற்றை அறியமுடியாத தாதாசாரியரின் மாணக்கர்கள் ஓடோடிச் சென்று, தீட்சிதர் பட்டாடையை நெருப்பிலிட்டுக் கொளுத்தினார் என்று சொல்ல, ஆசிரியரும் அதனை அரசனுக்கு அறிவித்தார். அரசன் தீட்சிதரிடம் பட்டாடை எங்கே என்று கேட்ப அவர் அதைப் பரமசிவன் அணிந்திருக்கிறார் என்றார். பரமசிவன் பட்டாடை அணிந்திருப்பதைக் காட்டுவீர்களா என்று அரசன் கேட்ப, தீட்சிதர் அவனை அழைத்துச் சென்று சிவன்கோயிலில் சிவலிங்கப்பெருமான் அதனை அணிந்திருப்பதைக் காட்டினர்.

தீட்சிதரின் பெருமையை அறிந்த அரசன் மேலும் வரிசைகள் நல்கியதைக்கண்ட தாதாசாரியர் சினந்து, அவரை வாதுசெய்ய அழைத்துத் தோற்றார். பின்னர் தீட்சிதர் ஆற்றில் நீராடும்போது அவரைக் கொன்றுவிடும்படி குற்றேவல்காரரை அனுப்பினார். ஏவல் காரர் தீட்சிதருக்கு அருகில் சென்ற போது அவரைச் சூழச் சூலமேந்திய வீரர் பலர் காவல்காத்து நிற்பக்கண்டு அஞ்சியோடினார்.

(19-ம் பக்கம் பார்க்க)

★ சுக்கிராசாரியர் சூரனுக்கு உபதேசித்தது மாயாவாதம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகான்.... (18-ம் பக்கத் தொடர்ச்சி)

தீட்சிதர் செய்த நூல்களுள் சித்திர மீமாம்சா, சிவார்ச்சன சந்திரிகை, சித்தாந்த லேச சங்கிரகம். நயமணிமாலை (நயமயூக மாலை) குவலயானந்தம், துர்க்கா சந்திர கலாஸ்துதி, ஆதித்யஸ் தோத்திர ரத்னம், வீர சைவம், வரதராஜஸ் தவம், கிருஷ்ண தியான பத்ததி பக்திசதகம், சாந்திஸ்தவம் முதலாய நூல்களோடு, வேதாந்த தேசிகர் செய்த யாதவாப் யுதயம் என்னும் காவியத்துக்கு வியாக்கியானமும் செய்துள்ளார். இன்னும் வங்காளத்து மகனீயர் மது சூதன சரஸ்வதி பாராட்டும் வகையில் பரிமளம் என்னும் விசேட உரையும் செய்துள்ளார். அஃதாவது முன்னர் வியாசர் செய்த பிரம்ம சூத்திரத்துக்கு சங்கராசாரியர் செய்த பாஷ்யத்தின் பின், வாசஸ்பதி மிஸ்ரர் செய்த பாமதியின் பின், அமலானந்தர் செய்த கல்பதருவின்பின் அப்பையதீட்சிதர் "பரிமளம்" எழுதினார். பிரம்ம சூத்திரத்தின் பின்வந்த நூல்களை வங்காளப் பெரியார் பெரிதும் போற்றியுள்ளார்.

எழுபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்த இவர் ஒரு நாள் மார்கழி மாதத்துத் திருவாதிரை நாளில் இரவு இரண்டு மணியளவில் சிதம்பரம் ஆடல் வல்லானுய நடராசப் பெருமானின் தரிசனத்தையும் அதேவேளையில் கோவிந்தராஜப் பெருமாளுக்குக் கற்பூர ஆரத்தியையும் கண்குளிரக்கண்டு உருகித் தோத்திரஞ் செய்தார் என்பர்.

ஒருபக்கத்தில் லட்சுமிபதியையும், மறுபக்கத்தில் உமாபதியையும், ஒருபக்கத்தில் பாம்பைப் படுக்கையாக உடையவரையும், மறுபக்கத்தில் பாம்பை ஆபரணமாக உடையவரையும், ஒரு பக்கத்தில் முரனைக் கொன்றவரையும், மறுபக்கத்தில் திரிபுரங்களை எரித்தவரையும், ஒரு பக்கத்தில் பாணுசுரனின் பகைவனையும், மறுபக்கத்தில் புஷ்பபாணனுன மன்மதனின் பகைவனையும் தரிசிக்க என்ன தவஞ்செய்தேனே என்று பொருள் தரும்வகையில் பாடினுர் என்பர்.

"மாரமணம் உமார மணம், பணதரதல்பம் பணுதராகல்பம், முரமதனம் புரமதனம் வந்தே பாணுரிம அஸமபாணுரிம்."

இவ்வாறுகச் சித்திராபூரணை நாளில் இரு மூர்த்தங்களையும் தில்லையில் தொழுதவாறே பூரணத்துவம் பெற்றுர்.



புகழ்பூத்த இப்பெரியாரின் குடும்பத்தில் அண்மையில் 1887 இல் வந்தவரே இமயஜோதி சிவானந்த சரஸ்வதி சுவாமிகளாவர்.

தென்னுசிய....
(16-ம் பக்தத் தொடர்ச்சி)

## எங்கும்பரவிய இராமாயணம்

இராமாயணம் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளின் கதை, அது தென்கிழக்காசிய நாடுகளில் பரவியுள்ளது. சீனு, யப்பான், தீபத், மலேயா, தாய்லாந்து, ஜாவா, சுமத்திரா, பாலி முதலாய நாடுகள் எங்கும் இராமன் புகழ் பரவியுள்ளது. சீனமொழியில் தசரத ஜாதகக் கதைகள் எழுதப்பெற்றுள்ளன.

தைரோநோயாசூயோரி என்னும் யப்பானியர் பன்னிரண்டாம் நூற்றுண்டிலேயே எழுதிய ஹோபூட்சூசூ என்னும் நூலில் இராமன் கதை பரந்துள்ளது. சீனமொழியில் லைதுத்சிசிங்கேதச் போத்சாங்சிங் முதலிய கதைகளிலும் இராமன்புகழ் வளருகிறது. தாய்லாந்தின் தாய்மொழியில் ராகின் என்னும் நூலில் இராமன்கதை வருகிறது.

யப்பானில் பாரிமாய் என்னும் நாட்டியம் வாலிவதம் தழுவியது என்பர். இவ்வாறே கூடமாய் என்பது சீதையின் வரலாற்றைக் குறிப்பதாகும் என்பர். இன்னும் இராவணன், சடாயு, மாரீசன், அநுமான் முதலானேரின் வரலாறுகளைக் கூறும் நாட்டியங்களும்; அவற்றை விளக்கும். தபால் முத்திரைகளும் யப்பானில் பரவியுள்ளன என்பர்.

சுமாத்திரா, ஜாவா, மலேசியா, தாய்லாந்து முதலிய நாடுகளில் இராமாயணக்கதை வெகுவாகப் பரவியுள்ளது என்பர். அங்கே நிலவும் கூத்துக்கள், நடனங்கள் யாவும் இராமாயணக்கதைகள் தழுவியனவாயே உள்ளன என்பர். அங்கெலாம் இராமன்கோயில்கள் இருந்தன என்றும், இராமாயணக்கதை படிக்கப்பெற்றன என்றும் கூறுவர்.

ஜாவாவில் உள்ள பிரம்பானன்என்னும்கோயிலில் உள்ள சிற்பங்கள் இராமாயணக்கதைகளையே சித்தரிக்கின்றனவாம். கிழக்கு ஜாவாவில் உள்ள சாண்டிஜகோ, சாண்டிபனுதரன் என்னும் கோயில்களில் அழகிய சிற்பங்கள் உள்ளனவாம். இந்தோனேசியாவில் கருடாழ்வாரின் சிற்பங்கள் எங்கும் உள்ளன. அந்நாட்டின் தேசிய இலச்சினையாயும் கருடன் அமைந்துள்ளது. அந்நாட்டுத் தேசியநடனங்கள் யாவும் இராமாயணம் தழுவியனவாகும்.

## உணவு கொள்ளும்போது

கிழக்கு நோக்கி உண்பதால் ஆயுள், தெற்கு புகழ் மேற்கு செல்வம், வடக்கு சத்தியம் வந்தடையும். நிலத்தில் அமர்ந்து வாழையிலையில் உண்ணும் முன் நீர் தெளித்தல் பரி சேஷனம் ஆகும். கண்ணகி ஆயர் பாடியில் கோவலனுக்கு அமுது படைத்தபோது அவன் நீர் தெளித்தான். அது பூமாதேவி கண்ணகியின் கற்பைக் கண்டு மயங்கியதால் என்று யாரோ கருத்துச் சொன்னுர்கள்.

★ கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குப் போதித்தது தர்மம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தத்துவ ஞானம்
## ஆறுவகைத் தரிசனங்கள்
## பூர்வமீமாம்சை

இந்துமதத்தின் விவேகம் நிறைந்த பகுதி தத்துவம். அது மதத்தின் சாராம்சம் செறிந்த ஸ்படிகம். அது பேருண்மைப் பொருளின் நியாய பூர்வமான தாக்கரீதியான விளக்கம். வாழ்வின் சிக்கல்களுக்கு நுட்பமானதீர்வு.

மரணத்தைப்பற்றிய இரகசியம், சாகா நிலைபற்றிய விளக்கம், ஆன்மாவைப்பற்றிய விளக்கம். படைப்புப் பொருள் பற்றிய விபரம். தத்துவஞானிகள் ஒவ்வொருவரும் தரும் விளக்கம் அதைக் கருத்தூன்றிப் படிக்கும்போது இன்பந்தருகின்றது. படிப்படியாக உயர்ந்து உய்திபெறும் மனப்பான்மை உண்டாகிறது.

உலகம் உண்மையானதா, வெறுந் தோற்றந்தானு, பசுக்களாய ஆன்மாக்களுக்கும் பதியாய பரமனுக்கும் உள்ள தொடர்பு என்ன. பரனை அடையும் ஆன்மாவின் நிலைதான் என்ன, என்றெல்லாம் தத்துவங்கள் ஆராய்கின்றன. தத்துவங்கள் யாவும் உள்ளுணர்வுகளே. அவை எவை என்றும் அவற்றைத் தந்தவர் கண்டவர் யாவர் என்றும் முன்னர் சுருக்கமாக அறிந்துள்ளோம் அந்தவழியில்

1. நியாயம் ... கௌதமரிஷி
2. வைசேஷியம் ... கணுதரிஷி
3. சாங்கியம் ... கபிலமுனிவர்
4. யோகம் ... பதஞ்சலிமுனிவர்
5. பூர்வமீமாம்சை ... சைமினி
6. உத்தரமீமாம்சை ... வியாசர்

மீமாம்சை என்றும் மீமாம்சம் என்றும் வழங்கும் தரிசனத்தைக் கண்டவர் சைமினி, இவர் வியாசரின் மாணுக்கர். இவர் மீமாம்சை செய்தபின், இவரின் குருவாய வியாசரும் ஒரு மீமாம்சை செய்தார், எனவே முதலில் எழுந்த மீமாம்சையை பூர்வ மீமாம்சை என்றும், பின்னர் எழுந்ததை உத்தர மீமாம்சை என்றும் வழங்கலாயினர்.

மீமாம்சை என்றுல் புனிதமானது என்று பொருள் அது தர்மத்தை ஆராய்வதால் தர்மமீமாம்சை எனவும் வழங்கும். அது நீதியையும் நாளாந்த வாழ்வுக்கான ஆசார ஒழுக்கங்களையும் கூறுவது. அது மிகவும் பெரிய நூல். அதில் ஆயிரக்கணக்கான அதிகரணங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகரணமும் ஐந்து அங்கங்களைக் கொண்டது. அவை விடயம், சந்தேகம், பூர்வபக்கம், உத்தரபக்கம், சங்கதி என்பனவாம். விடயத்தைக் கூறி, சந்தேகம் முதலியவற்றை நீக்கி, சங்கதியைச் சொல்லுவது அதிகரணம் என்ப.

வியாசரின் மாணுக்கராய சைமினி பெரியவர். அவரை அருந்தவராம் சைவமினிஎன்று அருணந்தி சிவாசாரியர் போற்றுவர். அவர் வேதங்களின் கருமகாண்டம் என்னும் கிரியைப்பகுதிகளை நன்காராய்ந்து மீமாம்சை செய்தவர்.

வேதங்கள் சமயக் கடமைகளை விதித்துள்ளன என்று சைமினி ஆரம்பிப்பர். விதிகளும் விலக்குகளும் வேதங்களில் உள்ளன. அவையே பிரதானமானவை. வேதங்கள் விதித்தவண்ணம் கடமைகளைக் கருமங்களைச் செய்தல் வேண்டும் என்பர். வேதமந்திரங்களிற் பார்க்கப் பிரமாணங்களுக்கே முதலிடம் கொடுப்பவர் அவர். எனவே அவருடைய நூலைச் சடங்குகள் பற்றிய நூல் என்றும் வழங்கினர். சைமினி செய்த பூர்வ மீமாம்சைக்கு முதலில் அகலவுரை செய்தவர் சபரர் என்னும் பெரியார். அவரை மீமாம்சகசபரர் எனப் பின்வந்தோர் வியந்து பாராட்டியுள்ளார்கள்.

பூர்வமீமாம்சைக்கு பேருரை எழுதித்தம்முள் மாறுபட்ட பெரியார் இருவர். குமாரிலபட்டர் என்பாரும், பிரபாகரன் என்பாருமாவர். உரையாசிரியர்கள் பிரமம் என்ெருரு பொருள் இல்லை என்றும் விளக்கத் தொடங்கினுர்கள். குமாரிலபட்டர் வேதத்துக்குப் பணிதல் விருப்பங்கள் நிறைவேறவும், துன்பங்கள்வராதிருக்கவுமே என்பர். பிரபாகரன் அங்ஙனமின்றி, வேதம் அதிகாரம் உள்ளது, அது அறுதியாய் ஆணையிட்டுக் கூறும்போது ஒருவர் பணியவேண்டும் என்பர். கரும உணர்ச்சி என்பது காரியதா ஞானமாகலில் பூர்வமீமாம்சையை கர்மமீமாம்சை எனவும் வழங்குவர்.

இவ்வாருக உரைக்காரர் வேதமந்திரங்களை விடப் பிரமாணங்களுக்கே ஏற்றங்கொடுத்து உபநிடதங்களையே மட்டந்தட்டிவிட்டனர். வேதத்தின் தருமம் கட்டளைப்பாங்கில் அமைந்துள்ளது என்றனர்.

வேதச்சடங்குகளில் ஒருவர் விரும்பிச் செய்வன காமியம். கட்டாயமாகச் செய்யவேண்டியவை நித்தியம். இன்ன கருமம் செய்தால் இன்ன பலன் கிடைக்கும் என்னும் நம்பிக்கையிற் செய்வது காமிய விதியாகும். நித்திய கருமம் நிபந்தனை எதுவுமின்றிச் செய்வனவாகும். காலை மாலை வேளைகளில் நாம்செய்யும் சந்தியாவந்தனம், ஜபம், தியானம் என்பன நித்திய கருமங்களாம். விசேட காலங்களில் நாம் செய்யும் சிராத்தம், மாளயம் முதலியன நைமித்திய கருமங்களாம்.

காமிய கருமங்கள் முற்காலத்தில் வழக்கிலிருந்தன. பிள்ளைப் பேறு கருதிப் புத்திரகாமேட்டியாகம், பேராசானுக வேண்டிச் செய்யும் இராசசூய வேள்வி, மோட்ச இன்பங்கருதிச் செய்யும் ஜியோதிஷ்டோமம் முதலியன காமிய கருமங்களாயிருந்தன.

இனி பூர்வமீமாம்சை பொதுவாக மீமாம்சை எனவே வழங்குவதற்குக் காரணம், உத்தர மீமாம்சை என்னும் மற்ற மீமாம்சை வேதாந்தம் என வழங்குவதால் என்பர்.

மீமாம்சை என்னும் பூர்வ மீமாம்சையில் இருதத்துவப்பிரிவுகள் உள்ளன. அவை உரையாசிரியர்களான பிரபாகரர், பட்டர் என்பவர்களின் பெயரால் வழங்கு

(21-ம் பக்கம் பார்க்க)

★ சத்து முக்காலத்தும் ஒரு தன்மையாய் உள்ளது ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய தத்துவஞானம்....

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன. பிரபாகரர் எழுதிய பாடியம் பிருகதி என வழங்குகிறது.

சபரரின் பாடியத்தை மேற்கொண்டு பட்டர் எழுதிய உரை, சுலோகவார்த்திகம், தந்திரவார்த்திகம், துட்டீகா என மூன்று பகுதிகளாயுள்ளன. இவர் வேதங்களின் அழியாத்தன்மை, வேதச்சடங்குகளின் சிறப்பு என்பனவற்றை எழுதியுள்ளார்.

சைமினியின் மீமாம்சை வேள்விகளுக்கான விதிமுறைகளைக் கூறுவதால் வேள்வி நூல் எனவும் பெயர் பெற்றது. அது வேதத்துக்குப் பொருள் கொள்ளும் முறைகளைக் கூறுவதால் பொருள் விளக்க நூல் எனவும் பெயர்பெற்றது. அது தத்துவக்கோட்பாடுகளை ஆராய்வதால் தத்துவ நூல் எனவும் வழங்குகிறது.

சைமினி புத்தரைப்போல உலகம் இல் பொருள் என்று கூறவில்லை. அந்தமகான் உலகத்தை உள்பொருள் என்றே உரைத்தார். அவர் பல தெய்வங்களைப் பற்றிக் கூறியுள்ளார். எனினும் வினை பயனைத் தரும் என்பதை வலியுறுத்துமிடத்தில், அதுதானே தரும் என்னும் போது, ஊட்டுபவனைப்பற்றி நன்றாகக் கூறவில்லை.

சைமினி கி. மு ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்து மீமாம்ச தரிசனத்துக்கு நூல்செய்துள்ளார். அது மீமாம்ச சூத்திரம் எனப் பெயர் பெற்றது. அதைச் சைமினி சூத்திரம் எனவும் வழங்குவர். இந்நூல் பல வகைப்பட்ட பொருள்களையும் ஆராய்ந்து கூறுவதால் சங்கர்ஷ காண்டம் எனப் பெயர்பெற்றதுமாகும். இது பதினாறு பிரிவுகளைக் கொண்டதால் சோடசலட்சணி எனவும் வழங்கும்.

மீமாம்சை வேதத்தைவிட்டுப் புறம் போகவில்லை. வேதவாக்கிய விதி, நிஷேதம் என்னும் விலக்கு, மந்திரம், நாமதேயம், அருத்தவாதம் என்னும் ஐந்து வகைகளைக் கூறும். விதிக்கப்பெற்றனவற்றைச் செய்வதால் புண்ணியம் உண்டாகும் என்பவர், விலக்கப்பட்டவற்றைச் செய்தால் பாவம் உண்டாகும் என்பர். சைமினியின் பூர்வமீமாம்சையில் பன்னிரண்டு அத்தியாயங்கள் உள்ளன. இவர் காட்சி என்பதற்கு மூன்று பிரமாணங்கள் உண்டென்பர். அவை பிரத்தியட்சம் என்னும், கண்காணவெளிப்படையாகவுள்ளது; அநுமானம் என்னும் யூகித்தறிவது, அதிகாரம் என்னும் சான்றிதழ்பெற்றது என்பர். வேதம் அதிகாரம் பெற்ற சான்றிதழ் என்பது முடிபு.

சைமினி வேதத்தையே பெரிதெனக் கொண்டவர். அதற்குக் கொழுகொம்பு தேவையில்லை, அது அதிகாரமும் உரிமையும் கொண்டது. அது தர்மத்தின் அறிவுக்கான ஊற்று, தர்மத்தை அறிவதே பூர்வ மீமாம்சையின் முக்கிய நோக்கம். "அதாதோ தர்மஜிக்ஞாசா" என்பது ஒரு சுலோக ஒலி.

சைமினியின் தத்துவம் தர்மநெறிபற்றி, கருமகாண்டத்தை அடிப்படையாகக் கொண்டது. விலக்கப்பட்ட கர்மங்களை நிஷித்தகருமம் என்பர். அவையே உலகபந்தத்துக்குக் காரணமாகும். தர்மவழியில் நடத்தல், உண்மைபேசிக் கடமையைச் செய்தல் நன்மை பயக்கும் என்பர்.

சைமினி உலகத்தின் தத்துவ நோக்கம்பற்றிக் கூறவில்லை. கடவுள் ஆன்மா, சடப்பொருள் முதலியவற்றின் தொடர்பை விளக்கவில்லை. "யாகங்களைச் செய்து சொர்க்கத்தில் இன்புற்றிரு" என்று அழுத்தமாகக் கூறியதே சைமினியின் பூர்வமீமாம்சை.

வினைதானே பயன்தரும், ஊட்டுபவருக்கு இடமில்லை என்னும் சைமினியின் கோட்பாடு கண்டிக்கப்பட்டது. அன்றி உலகம் என்றும் அழியாதது என்றும் அவர் கூறியமை ஆராயப்பட்டது.

சைமினியின் மீமாம்சைக்குச் சபரர் உரை எழுதியுள்ளார். அது பெரிய பாடியமாயுள்ளது. இவருக்கு முன்னரே பர்த்துருமித்ரர், பவதாசர், அரி, உபவர்சர் என்பார்களும் உரையெழுதினர்கள். பிற்காலத்தில் குமாரிலபட்டர் விரிவுரை எழுதியுள்ளார். இவரைப் பின்பற்றியே பிரபாகரன் தமது உரையை எழுதினர். பிரபாகரன் செய்த கன்மம் அழிவதால் அது பயன் தராது என்றார். கன்மத்தின் அழிவில் உண்டாகும் அபூர்வம் என்பதே பயன்தருவது என்றார். அன்றி ஆன்மா கல்போலக் கிடக்கும் நிலையே முத்தி என்றார். அது பாடாணவாதம் எனப்படும். பாடாணம் என்பது கல். இவ்வாறாக பட்டர் எழுதியவை பாட்டாசாரியவாதம் என்றும், பிரபாகரன் சாதித்தவை பிரபாகரர் மதம் என்றும் வேறுபடுகின்றன.

சைமினி தமது நூலில் பலவித நியாயங்களை எடுத்தாண்டு அளவைநூலை வளஞ்செய்துள்ளார்: தாலிபுலாக நியாயம், தூலா அருந்ததி நியாயம், கூபமண்டுக நியாயம், காகதாலிக நியாயம், மர்க்கடமார்ச்சால நியாயம் என்பன ஒருசில.

இவ்வாறாக சைமினியாகங்கள், கருமங்கள் பற்றிக் கூறியதேயல்லாமல் உலகத்தின் தத்துவநோக்கத்தைக் கூறவில்லை. பரம்பொருள், ஆன்மா, சடப்பொருள் உறவுபற்றிக் கூறவில்லை. அவர்தாம் கடவுளைப்பற்றிக் கூறாமைக்கு பிற்காலத்தில் வருந்தி, சிவதரிசனம் கண்டு திருநடனம்பற்றி வேதபாதஸ்தவம் பாடினார் என்ப.

வேதத்தை ஆராய்ந்தமைக்காக அவரை அருந்தவன் என்று பாராட்டிய அருணந்தி சிவாசாரியர், அவரை மறுத்து உரையெழுதிய பட்டரையும் பிரபாகரனையும் வெகுவாகப் பரபக்கத்திற் கண்டித்துள்ளார்.

இனி மீமாம்சைக் கோட்பாடு குறித்த நூல்கள் மிகப்பலவாகும். அவற்றுள் ஒரு சில பின்வருமாறு அமையும்.

1. சைமினி — மீமாம்ச சூத்திரம்
2. சபரர் — மீமாம்ச சூத்திரபாஷியம்
3. பிரபாகரன் — பிருகதி

22-ம் பக்கம் பார்க்க)

★ அசத்து முக்காலத்தும் ஒரு தன்மையால் இல்லாதது ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# புராதன இந்தியாவும் உலகமும்

ஆராய்ச்சி நிபுணராய கலாநிதி அல்ராகர் இந்து ஆசிய பண்பாடு பற்றி எழுதும்போது, கஸ்பியன் கடலின் அப்பால் பாகு என்னும் இடத்துக்கு அண்மையில் பழைய சிவன்கோயில் இருந்ததாகக் கண்டுள்ளார். பஞ்சாப் மாநிலத்திலிருந்து பரம்பரையாகப் பண்பாடுபெற்ற குருக்கள்மார் அங்கே பூசைசெய்து வந்தார்களாம்.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே அங்கே ஆமீனியாப் பிரதேசத்தில் இந்துப் பண்பாட்டுக் குடியேற்றம் புகழுடன் நிலவியது. ஐந்நூறாண்டுக் காலம் ஒளிபரப்பிய அந்தக் குடியேற்றம் அரசசிடாய் வம்சத்துவந்த மன்னர் பரிபாலனத்தில் அமைந்தது.

பபிலோனிய அசிரியாவோடு பாரதநாடுகொண்டிருந்த தொடர்பும், அங்கெல்லாம் மித்திரன், வருணன், சூரியன், இந்திரன் முதலான தெய்வ உருவங்கள் வழிபாட்டுக்குரியனவாக இருந்தமையும் அறிய வருகிறது. வருணனை உருவண என்றும், மித்திரனை மித்திரா என்றும், சூரியனை சூர்யா என்றும் இந்திரனை இந்திரா என்றும் அவர்கள் வழங்கினார்கள்.

சொருஸ்திரிய மதம் என்பதும் வேதங்களின் வழியில் வந்ததாகப் பெரியவர்கள் கருதுகிறார்கள். கி. மு. ஆறும் ஏழாம் நூற்றாண்டுக் காலத்தில் அங்கெல்லாம் இந்திய வீரர்கள் படைகளில் சேர்ந்து புகழ் பெற்றார்களாம். அவர்கள் கூலிப்படைகளாய் இராமல் நேர்மையாகக் கடமை செய்தார்களாம். அவர்கள் கிரேக்க நாகரிகத்தையும் கண்ட பெருமை பெற்றவராம்.

பாரசீகம் என்னும் ஈரான் நாடு பண்டைய இந்தியரிடம் சமஸ்கிருதம் கடன்வாங்கி மொழி வளர்த்தது. வீணையை வீண என்றும், தமருகத்தை தம்பருக் என்றும், சதுரங்கம் என்பதை சகத்ரங் என்றும் நீலோத்பலம் என்பதை நிலோபல என்றும் வழங்கினர்.

இவ்வாறாக ஹோமர் முதலான கவிகள் போற்றிய சூரியவழிபாட்டு அம்சங்கள் மாக என்னும் பூசாரிமார்களால் அங்கிருந்து இந்தியாவில் பழக்கப் பெற்றன என்பர். இனித் தென்னகத்துக் காணப்பெற்ற செப்பேடுகளில் பாலவி செய்திகள் கூறப்பட்டு அம்மொழியிலேயே கையொப்பமும் இடம்பெற்றுள்ளன என்பர்.

இஸ்லாம் உதயமானதும் அராபிய பண்டிதர்கள் இந்தியாவுக்குக் கல்வியின் பொருட்டும் காலடிவைத்தனர். இந்தியரின் வைத்தியம், கணிதம், வானசாத்திரம், சோதிடம், சிற்பம், இசை முதலியவற்றைக் கருத்தூன்றிக் கற்றனர். இன்னும் இந்திய வைத்தியர்களை இங்கிருந்து அழைத்துச் சென்று தங்கள் பிரதேசமெங்கும் வைத்தியசாலைகள் அமைத்தனர்.

சமஸ்கிருத பண்டிதர் பலர் பிரகஸ்பதி சித்தாந்தம், காரக, சுஸ்ருத, ஆரியபத்திய முதலாய அரும் பெரும் நூல்களை அராபிமொழியில் பெயர்க்க உதவியாயிருந்தனர். சமஸ்கிருத மொழிகள் பல அவர்களின் பெயர்ப்புகளில் உருச்சிதையாமல் அவர்கள் மொழியிற் கலந்தன. இந்துக்கள் சிலர் இஸ்லாம் மார்க்கத்தை இறுகத் தழுவிக்கொண்டதும் உண்டு.

இனி மேற்கிலிருந்து தென்கிழக்கு, கிழக்கு நோக்கும்போது பலமுறையறிந்த பண்டைய செய்திகள் புதிதுபுதிதாகத் தெரியவருகின்றன. அங்கெல்லாம் தமிழ், சமஸ்கிருதம், பாளி வெகுவாகப் பரந்து கலந்தன. திபெத்தியர் வாகட முறையில் வாகட ஏட்டினை நீரில் தோய்த்தால், அந்தநீர் ஔடதமாகிறது. யப்பானியர் தங்கள் இடுகாட்டு நினைவுத் தூண்களில் தேவநாகரி எழுத்தில் வாசகமெழுதி வந்தார்கள். மங்கோலியர் சமஸ்கிருத ஏடுகளைப் புனிதமாகப் போற்றினார்கள், விலையுயர்ந்த செல்வமாகப் பேணினார்கள்.

இவ்வாறாக அங்கெல்லாம் பாரதப் பண்பாட்டில் மலர்ந்த பல்வேறு துறைகளாய சமயம், மெய்யியல், சிற்பக்கலை, கட்டிடக்கலை, இலக்கியக்கலை முதலியன யாவும் பரந்து மணங்கமழ்வனவாயின.

இவை யாவும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் பாணியில் நாடுபிடி படலங்களாய் அமையாது, நல்ல முறையில் கனிந்த பண்பாட்டுப் பாணியில் அன்பாதரவு முறையில், சகோதரத்துவ நெறியில் பரந்தனவாகும்.

---

## இந்திய தத்துவஞானம்....

(21-ம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 4. | சாரிகநாதர் | — | ருச்விமாலா |
| 5. | பாவநாதர் | — | நயவிவேகம் |
| 6. | குமாரிலபட்டர் | — | வார்த்திகம் |
| 7. | சுசரிசமிசிரர் | — | காசிகா |
| 8. | சோமசேசுவரர் | — | நியாயசுதா |
| 9. | வேங்கடதீட்சிதர் | — | பார்த்திகாபரணம் |
| 10. | பார்த்தசாரதி | — | நியாயரத்னாகரம் |
| 11. | மண்டனமிச்ரர் | — | விதிவிவேகம் |
| 12. | வாசஸ்பதி | — | நியாயகணிகம் |
| 13. | மாதவர் | — | நியாயமாலா |
| 14. | அப்பையதீட்சிதர் | — | விதிரசாயனம் |
| 15. | ஆபதேவர் | — | நியாயப்பிரகாசம் |
| 16. | பாஸ்கரர் | — | அர்த்தசங்கிரகம் |
| 17. | காண்டதேவர் | — | பட்டதீபிகை |
| 18. | இராகவானந்தர் | — | சூத்திராதிதிட்டி |
| 19. | இராமேஸ்வரர் | — | சுபோதினி |
| 20. | விசுவேசர் | — | பட்டசிந்தாமணி |
| 21. | வேதாந்ததேசிகர் | — | சேஸ்வரமீமாம்சை |

---

## பழைய மாநிலங்கள்

குருக்ஷேத்திரம், மத்ஸ்யம், பாஞ்சாலம், கன்னியாகுப்ஜம், சூரசேனம் முதலானவையும் திராவிடமுமாம்.

★ திருவருளின் கருத்தை அறிவது சைவசித்தாந்தம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நாற்பெரு நாடுகளில் நமது நாகரிகம்

கம்போடியா, தாய்லாந்து, லாஓஸ், வியட்னும் என்னும் நான்கு நாடுகளில் நாம் வணங்கும் தெய்வத் திருவுருவங்கள் இன்று புதைபொருளாய்வுக்காரரின் கண்ணுக்குப் புலனாகி, அறிவுக்கு விருந்தாகிப் புதுமையாய் வருகின்றன. அமுதம் இன்னும் எழும் என்னும் ஆசையால் பாற்கடலைக் கடைந்தவர்கள் போல இன்றைய அகழ்வரராய்ச்சியாளர், தோண்டத் தோண்ட இந்துப்பண்பாட்டுத் திருவுருவங்களைக் காண்கின்றார்கள், களிக்கின்றார்கள்.

இத்தெய்வ மூர்த்தங்களின் படிவங்கள்பல அவ்வவ் நாட்டு நூதனசாலைகளை அலங்கரிக்கின்றன. பாங்கொக், நொம்பென், சைகோன், ஹியூ, தூறேன், ஹனோய் முதலிய நகரங்களில் விஷ்ணு, சிவலிங்கம், ஹரிஹரன், பிள்ளையார் திருவுருவங்கள் மிகுதியாயுள்ளன. லாஓஸ் நாட்டில் ஒரே கல்லில் 900 விஷ்ணு வடிவங்கள் அமைந்துள்ளன. தாய்லாந்திலும் லாஓஸ் நாட்டிலும் கண்டெடுக்கப்பெற்ற கணேசருக்கு இரண்டு திருக்கரங்கள் மாத்திரம் உள்ளன. ஐங்கர வடிவம் பிற்காலத்தில் வந்ததாகும் என்பர்.

இதனாற்போலும் திருமந்திரத்தில் வருகின்ற ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை என்னும் பாடலைத் திருமூலர் பாடவில்லை என்கிறார்கள். சியன்மாய் என்னும் நகரத்தில் நான்கு திருக்கரங்கள் உள்ள விநாயகர் வடிவம் பிற்காலத்தில் எழுந்தருளியுள்ளது. பங்கொக் நகரில் சிவாலயம், விஷ்ணுவாலயம், பிள்ளையார் கோயில் என மூன்று ஆலயங்கள் உள்ளன. இவை தென்னாட்டிலிருந்துவந்த தமிழ்ப் பிராமணர் தாபித்தவை என்றும் அவர்களின் வழித்தோன்றல்களே பரிபாலனப் பொறுப்பிலும் இருக்கிறார்கள் என்பர்.

உல்லாசப் பிரயாணிகளாய ஐரோப்பியர் அங்கே விநாயகப்பெருமானின் திருநாமத்தை வர்த்தகத் துறையில் புகுத்தி அடையாளமாகக் கொண்டதை யிட்டுக் கவலைப்படுகிறார்கள். பண்பாடு இப்படியும் பரிணமித்துவிட்டதோ என்று ஏங்குகிறார்கள்,

இன்றும் பாங்கொக் நகரில் பிராமணர் பெருமதிப்புக்குரியவர்களாகவே கணிக்கப்பெறுகிறார்கள் என்பர். திருமணத்துக்கு முகூர்த்தம் பார்ப்பதற்குப் பிராமணரையே எல்லோரும் நாடுகிறார்கள்.

இன்றுகூட லொப்புரி நகரில் உள்ள விஷ்ணுவுக்கு மக்கள் தங்கத்தகடுகள் சாத்திச் சாம்பிராணிக் குச்சி கொழுத்தி, விளக்கேற்றி வழிபாடுசெய்கிறார்கள். நவநாகரிகமாந்தர் மெழுகுவர்த்தி ஏற்றுகிறார்கள்.

கம்போடியாவிலும் வியட்னுமிலும் நூற்றுக்கணக்கான சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. அவை தென்னாட்டுத் தமிழர் பழகிய எழுத்திலும் நாகரி எழுத்திலும் உள்ளன. அவை கோயில்களை அமைத்த அரசர்கள் பெயர்களையும் அவர்கள் அளித்த கொடைகளையும் விபரமாகக் கூறுகின்றன. அவை ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டனவாகும் என்பது துணிபு.

பழைய பரம்பரையில் வந்தவர் பலரும் பக்தியோடு சிவன்கோயில்களுக்கும் விஷ்ணு கோயிலுக்குமே அதிகமான கொடைகளைக் கொடுத்துள்ளார்கள். காலப்போக்கில் சில ஆட்சியாளர் இவற்றைப் பௌத்த கோயில்களாக்கி மீளப்பழைய கோயில்களாக்கியதும் உண்டு. அங்கே பழைய விஷ்ணுகோவிலில் திருவுருவத்தைக்காணோம். அயலில் புதிதாக அமைத்த கோயிலில் சீமெந்தினால் திருவுருவம் செய்து பெருஞ்சிறப்புச் செய்கிறார்கள்.

காலப்போக்கில் தோன்றின மறைந்தும், மறைந்தன தோன்றியும், சிறுத்தன பெருத்தும், பெருத்தன சிறுத்தும் மாறியமைதல் கண்கூடு. [இன்று எங்கள் சிவபூமி எங்கே நாமெங்கே. இதை யார்க்கெடுத்துரைப் போம். யாரொடு நோவோம் என நாமிருக்கும் வகையில் தென்னாசிய நாடுகளிலும் நடைபெற்றமை விந்தையல்ல.]

சம்பா நாட்டில் பெரும்பாலான கோயில்கள் சிவன்கோயில்களாயும் உமாதேவியார் அல்லது பகவதி மூர்த்தம் உள்ளனவாயும் இருப்ப, ஆங்கொரு கோயிலில் மக்கள் உமாதேவியாரைச் சீனதேவதை என வணங்குகின்றார்கள். மலைநாடெங்கும் சிவலிங்கங்கள் பரந்து சிதறிக்கிடக்கின்றன. (The images of Shiva-linga are scattered over the hill) இன்னும் வேடிக்கை என்னவென்றால் பௌத்த கோயிலின் முற்றத்தில் சிவலிங்கம் ஒன்று வெயில் குளிக்கின்றது. ஆனால் தாய்லாந்தில் பழைய புனித முறைகள் நிலவுகின்றன. நகன் பாதம் என வழங்கும் இடம் நகரபிரதம எனவழங்கிய முதல்நகரமாகும். பல்லவகாலத்து சின்னங்கள், சுவஸ்திகா சின்னம் மிகுதியாக உள்ளன.

## பர்மா

பாரதநாட்டிலிருந்து தென்னாசிய நாடுகளுக்குச் சென்றவர்கள் பர்மாவைக் கண்டேபோனார்கள். கானகம் ஐராவதி நதியால் அழகும் விளைவும் பெற்று, நெல்லும் தேக்கமரமும் ஏற்றுமதி செய்தநாடு. றங்கூன் பச்சையரிசியை யாழ்ப்பாணத்தவர் வெகுவாக விரும்பியதும் உண்டு. மிக மலிவாகக் கிடைத்த அந்த அரிசியை உலையில் இட்டால் அடுத்தவீடெல்லாம் மணத்தகாலம் ஒருகாலம். ஊர்காவற்றுறையில் 5000 மூடை அரிசியோடுவந்த உரு என்னும் கப்பல் தமிழ் நாகரிகத்தின் சின்னம். அந்தப் பெருமை நிலவுதல் வேண்டும் நிற்க.

தமிழ்நாட்டவரிட்ட இடப்பெயர்கள் பல பர்மாவில் உருமாறி ஒலிக்கின்றன. தென்னசிரீம் என்பது தென்னாட்டுத் தமிழனை நினைவு படுத்துகிறது. ஸ்ரீக்ஷேத்திரம் என்பது சிற்சிற் என ஒலிக்கிறது. இன்னும் அரிமர்த்தனபுரம் முதலான இடங்களும் அங்கே உள்ளன.

இன்னும் கணேசன், பிரமன், சிவன், லிங்கம், பார்வதி, விஷ்ணு, அநுமான் முதலான திருவுருவங்களை

(24-ம் பக்கம் பார்க்க)

★ மண்முதல் முப்பத்தாறு தத்துவங்களை அறிவது பாசஞானம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரிய வழிபாடு

சூரியனுக்குப் பல திருநாமங்கள் வழக்கில் உள்ளன. தினகரன், பகலவன், ஞாயிறு, வெய்யோன், பரிதி முதலியவற்றுள் ஞாயிறு என்பதே தமிழில் அதிகமாக வழங்குவதாகும். சூரிய வழிபாட்டைச் சங்கராசாரியர் சௌரம் எனத் தாபித்துள்ளார். சூரிய சித்தாந்தம் அவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. அதை சௌரமானம் என்பர். புறச்சமயத்தவராயிருந்தும் இளங்கோவடிகள் அவரை ஞாயிறு போற்றுதும் எனத் தமது காப்பியத்தில் வணங்குகின்றார். திருமுருகாற்றுப்படை தந்த நக்கீரர் பலர் புகழ் ஞாயிறு என்று பாடித் தாமும் வணங்குகின்றார். பேரரசர்கள் தாங்கள் சூரிய குலத்தவர் எனப் பெருமைப்பட்டனர். ஆதித்தன் குல முதல்வன் என்று கம்பர் பெருமைப்படுத்துகின்றார். வான்மீகி முனிவர் தமது ஆதி காவியத்தில் ஆதித்த இருதயத்தில் சூரியனை அருமையாகப் போற்றுகிறார். ஆதித்த இருதயமே இராமனுக்கு வலிமையை மிகைப்படுத்தியது என்பர்.

சூரியன் சிவபெருமானின் அட்டமூர்த்தங்களில் ஒருவர். முப்பெருஞ் சுடர்களில் முதல்வர். உலகத்தை வாழ்விப்பவர். பல்வேறு உலகங்களை நிலை பெறச் செய்பவர். பகல் இரவு வேளைகளையும் பருவ காலங்களையும், விளைவு வேளாண்மைகளையும் தருபவர். கண் கண்ட கடவுள். அவர் திருநாமத்தால் ஞாயிற்றுக் கிழமை நிலவுகிறது. அது உலகமெல்லாம் நிலவும் ஞாயிற்றுக்கிழமையேயாம்.

திருக்கோயில்களில் பரிவார தெய்வமாகக் கிழக்குப் பிராகாரத்தில் அவருக்குக் கோட்டம் உண்டு. இன்னும் நவக்கிரக தாபனத்தில் அவரே நடுநாயகர். சுமார்த்தப் பிராமணர் சூரியனுக்குச் சிறப்புவழிபாடு செய்வதும் உண்டு. சிவபூசையில் சூரியபூசைக்கு முதலிடம் உண்டு. திருக்கோயிலில் ஒரு காலப் பூசை சூரியனுக்கே முதற்பூசையாக ஆரம்பிக்கிறது.

பாரதநாட்டில் வடக்கில் ஒரிசா மாநிலத்தில் உள்ள புவனேஸ்வரம் என்னும் திருக்கோயிலையடுத்து எழுநூறாண்டுப் பழமைவாய்ந்த சூரியன் கோயில் உள்ளது. இன்னும் அகமதாபாத் நகருக்சப்பால் ஆயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்த சூரியனார் கோயில் உள்ளது. அப்பால் காஸ்மீர் பிரதேசத்திலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய சூரியனார் கோயில்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பகல்வாயில் உச்சிக்கிழான் கோயில் இருந்ததாக இளங்கோவடிகள் பாடியுள்ளார். முதற் குலோத்துங்க மன்னனும் தமிழ் நாட்டில் சூரியனார் கோயில் அமைத்தான் என்ப. தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் மூலமூர்த்தியின் மேல் சூரியனின் நேர்ஒளிபடுமாறு அமைக்கும் சிறப்பு முறையும் நிலவியது. அன்றி, உதித்துவரும் சூரிய ஒளியும், மறைந்துபோகும் சூரிய ஒளியும் படுமாறு ஆலயங்களைக் கிழக்குநோக்கியும் மேற்குநோக்கியும் அமைத்தார்கள் என்பதும் கருதவேண்டியதாகும்.

---

**நாற்பெரு....** (23-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கே ஏராளமாகக் கண்டுள்ளார்கள். இன்னும் அங்கே புத்தரை உள்ளிட்ட பத்து அவதாரத் திருவுருவங்களைத் தாம் கண்டதாக பேராசிரியர் பி. வி. பாபற் எழுதுகிறார். இன்னும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், வேளாளர் ஆகிய நால்வகை வருணத்துக் குறிப்புகளும், பலவிதமான பொன், வெள்ளிப் பாத்திரங்களும் தான் கண்டதாகக் குறிப்பர். இன்னும் சங்கு, தர்ப்பைப்புல், தீட்டிய அரிசி முதலியனவும் அங்கே அழிபாடுகளில் கிடந்தன என்பர்.

---

# சித்தத்தைச் சிவன்பால்வைத்தார்கள்

சுந்தரமூர்த்தி நாயனார் கண்ட தொகையடியார் கூட்டத்தவர்களுள் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்களுள் ஒருசாரார் எல்லாம் சிவன் செயல் என்றும், பாரம் ஈசனுக்கென்றும் கருதி அவர்கள் ஞானவொடுக்கத்திலும், மக்கள் மத்தியிலும் வாழ்ந்தார்கள். நாடு நாடாகவும், மனிதர் மனிதராகவும் நிலவுவதற்கு ஞானியர் அத்தியாவசியமானவராவர்.

அவர்கள் விருப்பு, வெறுப்பு அற்று; ஓடும் செம்பொன்னும் ஒன்றே எனக் கருதி வாழ்ந்தவர்கள், வாழ்கின்றவர்கள். உடம்பினை இழுக்கென உணர்ந்தாரைப் போலன்றி, உடம்பே உத்தமன் கோயில் எனக்கருதி இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறற் பொருட்டேயாம் எனக் கருதுபவர். அவர்கள் யோகநித்திரையில் ஆழ்ந்தும் இருப்பவர்கள். யோகம் கலைந்ததும் சிந்தனையில் மூழ்கி இருப்பவர்கள்.

சிலர் ஏகான்மவாதக் கோட்பாட்டில் பழகி, அத்பவைதம் என்னும் வேதாந்த நெறியில் வாழ்பவர்கள் இவர்கள் சிந்தனையில் சிவத்தைத் தேக்கிச் சிவமாந் தன்மையடையச் சிந்தித்து இருப்பவர்கள், சிவன்சாயலைத் தாம் பெறுவதே இவர்களின் பெரும் பேறாகும்.

இன்னுஞ் சிலர் அணைந்தோர் தன்மையில் அமைந்ததாகும். அவர்கள் சீவன்முத்தர்களாவர். முற்றிப் பழுத்த சிவஞானிகளாய் நன்மை தீமையற்று, எச்செயலுமின்றிச் சிவனிடத்தே தம்மை ஒப்படைத்து ஒன்றியிருப்பவர்கள்.

---

★ **பாசஞானத்தால் விஞ்ஞானத்தால் பரமனை அறிய முடியாது** ★

அச்சுப்பதிப்பு: [illegible] அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்க்வைற் இலவசம்
MWS MILKWHITE

# மில்க்வைற் தொழிலகத்தின் பலநோக்குப் பணிகள்

★ **ஏடு தொடக்கும்போது**
பனையோலை ஏடுகள், அரிவரி மட்டைகள்.

★ **சிறுவர் வகுப்புகளில்**
நீதிநூல்கள், வாய்பாடு மட்டைகள்

★ **வளர்ந்த பிள்ளைகளுக்கு**
மாதாந்தச் செய்திச் சஞ்சிகைகள், களஞ்சியம் போன்ற கைநூல்கள்

★ **சமய தீட்சையின்போது**
நித்திய கருமவிதி, திருமுறைப்பாடல்கள்; நடராஜர் படங்கள், திருநீற்றுப் பைகள்

★ **வீட்டுத் தோட்ட விருத்திக்கு**
மரக்கறி விதைகள், நாற்றுகள், மூலிகைச்செடிகள் முதலியன

★ **விறகுப்பஞ்சம் போக்க**
சவுக்கு, சஞ்சீவி, இப்பில்இப்பில் கன்றுகள்

★ **நிழல் தருவதற்கு நாட்டுவதற்கு**
வேம்பு, மலைவேம்பு, மருது முதலியன

★ **கனியுதவ நடுவதற்கு**
பப்பா, பலா, கொடித்தோடை முதலியன.

எல்லாம் இலவசம்! என்றும் இலவசம்!

**மில்க்வைற் தொழிலகம்**
காங்கேயன்துறை வீதி - யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா தொழிலகம்

இணுவில்.

## ஆக்கபூர்வமான தயாரிப்புகள்

ANNA COFFEE அண்ணா கோப்பி

- ★ அண்ணா பற்பொடி
- ★ அண்ணா பத்தி
- ★ அண்ணா நீலம்
- ★ அண்ணா சாம்பிராணி
- ★ அண்ணா கற்பூரம்
- ★ அண்ணா ரல்கம் பவுடர்

- O தரத்தில் சிறந்தவை
- O மக்கள் ஆவலுடன் வாங்குபவை
- O எங்கும் கிடைப்பவை
- O எல்லோரும் விரும்புபவை

அண்ணா பெயர் பெற்ற விநியோகம்

★ அண்ணா கோப்பி ★ அண்ணா தேயிலை


உணவும் சிற்றுணவும் சிறுவர் முதலியவர்களுக்கான சத்துணவு

## ← ஜீவாகாரம் →

சிறுவர் சிறுமியர் விரும்பிச் சுவைக்கும் அண்ணா - இனிப்பு - ரொபி

ஆதரவாளர் வசதி நோக்கி

வண்ணைச் சிவன் கோயில் முன்வீதியில் அமைந்த கடையிலும் நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு தேரடியின் தென்பாகத்தில் கடையிலும் வசதிகள் செய்துள்ளோம்.



தலைமையகம்:

# அண்ணா தொழிலகம்

இணுவில், தொலைபேசி: 23412, 23413


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org